Follow us:

# தமிழன்

THAMILAN தமිලන්

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 02, இதழ் : 510 சுபகிருது வருடம், சித்திரை மாதம் 16ஆம் திகதி வெள்ளிக்கிழமை (29.04.2022) ஹிஜ்ரி - 1443, ரமழான் - 27 , 0115886187 - பக்கங்கள் 12

விலை ரூ.30

## மஹிந்த நீங்கினால் நாமலே எதிர்க்கட்சித் தலைவர்!

பின்வரிசை எம்.பிக்கள் அழுத்தம்

02 பக்கம்

## 50 கிலோ யூரியா 40 ஆயிரமானது




02 பக்கம்



## ஜனாதிபதிக்கு பதிலாக பிரதமர் பதவி விலகலா? தலைவலிக்கு உடல்வலி மருந்து சரிவருமா?

கேள்வியெழுப்புகிறார் நாமல் ராஜபக்ஷ எம்.பி.

02 பக்கம்

# ஹர்த்தாலால் ஸ்தம்பிதம்!

- அத்தியாவசிய சேவைகள் நேற்று முழு முடக்கம்
- அரசை வீட்டுக்குச்செல்ல ஒரே குரலில் வலியுறுத்து

02 பக்கம்

## இந்தியக் கடன் முடிவடைகிறது; புதிய கடனுக்கான வாய்ப்புமில்லை

ஐ.தே.க. தலைவர் ரணில்



இந்தியாவிடமிருந்து பெற்ற கடன் மே மாதத்துடன் முடிவடையும் என்றும் புதிய கடன் கிடைப்பதற்கான எந்த அறிகுறியும் இதுவரை இல்லை என்றும் முன்னாள் பிரதமர் ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

தற்போதைய நிலைமை குறித்து ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும், நாட்டில் பொருளாதார நெருக்கடி அதிகரித்து, அனைத்து வர்த்தக நிலையங்களும் மூடப்படும் சூழ்நிலையும் உருவாகலாம் என்றார். 02 பக்கம்

## பொருட்கள் விற்பனையின்போது துல்லியமான தரவுகள் கட்டாயம்

அதிவிசேட வர்த்தமானி வெளியானது

02 பக்கம்

## ஆளுந்தரப்பு கட்சித் தலைவர்களை இன்று சந்திக்கிறார் ஜனாதிபதி கோட்டா

இடைக்கால அரசின் தலைவிதி தீர்மானிக்கப்படும்

கூட்டத்தில் கலந்துகொள்ள சு.க. இறுதி நேர தீர்மானம்

•யோ. தர்மராஜ்

நாடு முகங்கொடுத்துள்ள நெருக்கடிகளுக்கு தீர்வாக இடைக்கால அரசாங்கத்தை அமைப்பது குறித்து ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும், ஆளுந்தரப்பு கட்சித் தலைவர்கள் மற்றும் சுயாதீன மாகவுள்ள கட்சித் தலைவர்களுக்கும் இடையில் இன்று விசேட கலந்துரையாடல் ஒன்று இடம்பெறவுள்ளது.

இக்கலந்து ரையாடல் காலை 10.30 மணிக்கு... 02 பக்கம்

கமெண்ட் கந்தர்..



கோட்டாவுக்கும் மஹிந்தவுக்குமிடையில சமரசம் செய்ய உந்த எரிக் சொல்ஹெய்ம் ஐயாவ கூப்பிட ஏலாதோ ?

## அத்தியாவசியப் பொருட்கள் சீராக கிடைக்குமென அமைச்சர்களால்கூட உறுதிகூற முடியாத நிலை

சபாநாயகர் தலைமையில் இடம்பெற்ற கட்சித் தலைவர்கள் கூட்டம் குறித்து மனோ எம்.பி. கருத்து



•யோ.தர்மராஜ்

நாட்டில் போதிய டொலர் இல்லை என்பதால் எதிர்வரும் சில மாதங்களுக்கு எரிவாயு மற்றும் எரிபொருள் தட்டுப்பாடின்றி விநியோகிக்க முடியும் என்பதற்கு கட்சித் தலைவர் கூட்டத்தில் கலந்துகொண்டிருந்த அமைச்சர்களான காஞ்சன விஜேசேகர மற்றும் செஹான் சேமசிங்க ஆகிய அமைச்சர்களால் உறுதியளிக்க முடியாது போனதாக நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்தார். 02 பக்கம்

### உஷ்



இடைக்கால அரசில் பதவியொன்றை பெறுமாறு முன்னாள் அமைச்சர் சுசில் பிரேமஜயந்தவை கோரினாராம் ஜனாதிபதி. ஆனால் அதனை பவ்வியமாக நிராகரித்துவிட்டாராம் சுசில். நேற்றுமுன்தினம் நடந்த சந்திப்பொன்றில் ஜனாதிபதியால் இவ்வாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

## அமைச்சுசார் பணிகளுக்கான வர்த்தமானியை காணோம்!

புதிய அமைச்சரவை மற்றும் இராஜாங்க அமைச்சர்கள் கடந்த வாரம் நியமிக்கப்பட்டனர் , ஆனால் அந்தந்த அமைச்சுகளின் நோக்கம் மற்றும் செயற்பாடுகள் இன்னும் வர்த்தமானியில் வெளியிடப்படவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

புதிய அமைச்சர்கள் மற்றும் இராஜாங்க அமைச்சர்களுக்கு குறித்த விடயங்கள் மற்றும் செயற்பாடுகள் பற்றிய புரிதல் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இதனால், அமைச்சர்களும், இராஜாங்க அமைச்சர்களும் தத்தமது அமைச்சுகளின் செயற்பாடுகள் தொடர்பில் தீர்மானங்களை எடுப்பதில் சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது. 02 பக்கம்

## லிந்துலையில் அரவிந்தகுமாரின் வீடு போராட்டக்காரர்களால் முற்றுகை

அவரது உருவ பொம்மையை எரித்து எதிர்ப்பு



•க.கிஷாந்தன்

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ பதவி விலகவேண்டும் என வலியுறுத்தியும், நேற்றைய பணிப்புறக்கணிப்பு போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்தும் லிந்துலை மெராயா பகுதியில் நேற்று மதியம் போராட்டம் முன்னெடுக்கப் பட்டது. 02 பக்கம்

## பரீட்சைகளுக்கான திகதிகள் அறிவிப்பு

ஐந்தாம் தர புலமைப்பரிசில் பரீட்சை, க.பொ.த. சாதாரண தர மற்றும் உயர்தர பரீட்சைகளுக்கான திகதிகளை பரீட்சைகள் திணைக்களம் நேற்று அறிவித்துள்ளது.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் எல்.எம்.டி.தர்மசேன இதனை தெரிவித்துள்ளார்.

2021ஆம் ஆண்டுக்கான க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை மே மாதம் 23ஆம் திகதி முதல் ஜூன் மாதம் முதலாம் திகதிவரை நடைபெறும். 02 பக்கம்



இலங்கை தினசரி மற்றும் வாரந்த பத்திரிகைகளை உங்கள் மொபைலில் பெற்றுக்கொள்ள எம்மோடு இணையுங்கள்

Viber இல் இணைய இங்கே CLICK செய்யுங்கள்

Viber




இக் குழுமத்தில் இணைவதனால் மற்றவர்கள் உங்கள் தொலைபேசி இலக்கத்தை பார்வையிட முடியாது

CLICK



# பத்தனையில் தொழிலாளர்களால் மேற்கொள்ளப்பட்ட ஆர்ப்பாட்டம்











(க.கிஷாந்தன்)

அத்தியாவசியப் பொருட்களின் விலையேற்றம், தொடர் மின் துண்டிப்பு, எரிபொருள் விலையேற்றம், டீசல் தட்டுப்பாடு என்பவற்றை கண்டித்து கொட்டகலை பத்தனை தோட்டத் தொழிலாளர்களால் ஆர்ப்பாட்டம் ஒன்று நேற்று(28) முன்னெடுக்கப்பட்டது.

பத்தனை கிறேக்கிலி, மவுண்ட்வேர்ணன், இராணியப்பு, பொரஸ்கிறிக் ஆகிய தோட்டங்களை சேர்ந்த தோட்டத் தொழிலாளர்கள், இளைஞர்கள், யுவதிகள், முச்சக்கரவண்டி சாரதிகள், வாகன சாரதிகள், நகர வர்த்தகர்கள் மற்றும் சமூக செயற்பாட்டாளர்கள் என சுமார் 500ற்கும் மேற்பட்டோர் இந்த கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டத்தினை முன்னெடுத்திருந்தனர்.

மேற்படி தோட்டங்களிலிருந்து தொழிலாளர்கள் பேரணியாக பத்தனை சந்தி வரை வந்து அங்கு அனைவரும் ஒன்றுகூடி எதிர்ப்பு பதாதைகளை காட்சிப்படுத்தியவாறும், கறுப்பு கொடிகளை ஏந்திக்கொண்டு கோஷங்களை எழுப்பியவாறு ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

# நடிகை அனுஷா காலமானார்



நடிகை அனுஷா சோனாலி தனது 47 ஆவது வயதில் நேற்று(28) காலை காலமானார். கொழும்பு தெற்கு களுபோவில போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் அவர் உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

திடீரென ஏற்பட்ட மூச்சுத்திணறல் காரணமாக அனுஷா சோனாலி உயிரிழந்ததாக வைத்திய சாலை வட்டாரங்கள் தெரிவித்தன. மேலும் அவர் உயிரிழப்பதற்கு முன்பு சில காலமாக நோய்வாய்ப்பட்டு சிகிச்சை பெற்று வந்துள்ளார்.

அனுஷா சோனாலி 1995ஆம் ஆண்டு சரசவி திரைப்பட விழாவில் சிறந்த வளர்ந்து வரும் நடிகைக்கான விருதைப் பெற்றுள்ளார்.

அனுஷா சோனாலி பல பிரபலமான படங்களில் நடித்து தனது ஆற்றலை வெளிப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## லிந்துலையில் அரவிந்தகுமாரின்...

அந்தவகையில் லிந்துலை எல்ஜின், லிப்பகலை, தங்ககலை, மெராயா, ஹென்போல்ட், திஸ்பனை ஆகிய தோட்டங்களைச் சேர்ந்த 800ற்கும் மேற்பட்ட தோட்டத் தொழிலாளர்கள், இளைஞர், யுவதிகள், சமூக செயற்பாட்டாளர்கள் உட்பட பலரும் இந்த போராட்டத்தில் கலந்துகொண்டிருந்தனர்.

இந்த போராட்டமானது, எல்ஜின் பிரதேசத்திலிருந்து பேரணியாக திஸ்பனை சந்திவரை சென்று மீண்டும் போராட்டக்காரர்கள் லிந்துலை மெராயா பிரதேசத்தில் உள்ள இராஜாங்க அமைச்சர் அரவிந்தகுமாரின் வீட்டிற்கு முன்னால் போராட்டத்தை தொடர்ந்தனர்.

மேலும், அவ்விடத்தில் சவப்பெட்டி, ரயர், இராஜாங்க அமைச்சரின் உருவ பொம்மை ஆகியவற்றை எரித்து, "மலையக மக்களுக்கு துரோகம்செய்த அரவிந்தகுமார் ஒழிய வேண்டும்" என கோஷங்களை எழுப்பினர். இதனால் அந்தப் பகுதியில் பதற்றமான சூழ்நிலை ஏற்பட்டதோடு, போக்குவரத்தும் இரண்டு மணிநேரம் பாதிக்கப்பட்டிருந்தது.

இதன்போது அமைச்சரின் வீட்டிற்கு எவ்வித சேதங்களும் ஏற்படாத வகையில் பொலிஸார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்தனர்.

## 50 கிலோ யூரியா 40ஆயிரமானது...

யோ. தர்மராஜ்

உரம் விற்பனை செய்யும் சில வர்த்தக நிலையங்களில் 50 கிலோ யூரியா மூடை ஒன்று 40 ஆயிரம் ரூபாவிற்கு விற்பனை செய்ய வேண்டியுள்ளதாக வர்த்தக உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

உரங்களை இறக்குமதி செய்யும் தனியார் நிறுவனங்களால் விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளதாலேயே இந்த நிலைமை ஏற்பட்டுள்ளதாக உர விற்பனையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

வர்த்தக நிலையங்களுக்கு மிகக் குறைந்த அளவான உரம் கிடைப்பதாகவும் அதனால், மிக அதிக விலைக்கு விற்க வேண்டியநிலை ஏற்பட்டுள்ளதாகவும் விற்பனையாளர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

உர நிறுவனங்களும் உடன் வழங்கும் காசுக்கு மாத்திரமே உரம் வழங்குவதாக தெரிவிக்கும் விற்பனையாளர்கள், இதனால், தற்போது ஒரு கிலோ யூரியா 800 ரூபாவிற்கு விற்பனை செய்யப்படுவதால், ஒரு மூடை யூரியா 40 ஆயிரம் ரூபாவாக காணப்படுவதாகவும் தெரிவித்துள்ளனர்.

## பரீட்சைகளுக்கான திகதிகள் அறிவிப்பு...

2022ஆம் ஆண்டுக்கான தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை ஒக்டோபர் 16ஆம் திகதியும், உயர்தரப் பரீட்சை ஒக்டோபர் மாதம் 17 ஆம் திகதி ஆரம்பமாகி நவம்பர் 12ஆம் திகதி வரை நடைபெறவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

## அமைச்சுசார் பணிகளுக்கான...

இந்த நிலைமை காரணமாக எடுக்கப்பட்ட சில தீர்மானங்களை நடைமுறைப்படுத்துவதில் தாமதம் ஏற்பட்டுள்ளதாக அமைச்சர்கள் பலர் தெரிவித்துள்ளனர்.

வர்த்தமானி அறிவித்தலை விரைவில் வெளியிட நடவடிக்கை எடுக்கப்படும் என ஜனாதிபதி அலுவலகத்தின் உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

## இந்தியக் கடன் முடிவடைகிறது;...

அத்துடன், தற்போதுள்ள பிரச்சினைக்குத் தீர்வு காணும் முயற்சியை ஒத்திவைக்க வாய்ப்பில்லை எனவும், நாடாளுமன்றம் நிதி அதிகாரத்தைப் பெற்று அனைவரின் கருத்துகளுடன் அடுத்த கட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

## மஹிந்த நீங்கினால்...

மஹிந்த ராஜபக்ஷவை பிரதமர் பதவியில் இருந்து நீக்கினால் முன்னாள் அமைச்சர் நாமல் ராஜபக்ஷ எதிர்க்கட்சித் தலைவராக நியமிக்கப்படுவார் என ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பின்வரிசை நாடாளுமன்ற உறுப்பினர்கள் குழு தெரிவித்துள்ளது.

எனவே மஹிந்தவை பிரதமர் பதவியிலிருந்து நீக்க வேண்டாம் என குறித்த குழுவினர் ஜனாதிபதியை சந்தித்து கோரிக்கை விடுத்துள்ளனர்.

அத்துடன் மஹிந்தவை பிரதமர் பதவியில் இருந்து நீக்கினால் 100க்கும் மேற்பட்ட, ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் உறுப்பினர்கள் நாமலுடன் எதிர்க்கட்சியில் இணைந்து நாமலை எதிர்க்கட்சித் தலைவராக நியமிக்க தீர்மானித்துள்ளதாக குறித்த குழு தெரிவித்துள்ளது.

## பொருட்கள் விற்பனையின்போது...

பொருட்களின் விற்பனை தொடர்பான துல்லியமான தரவுகளை கட்டாயமாக்கும் வகையில், நுகர்வோர் விவகார அதிகார சபை அதிவிசேட வர்த்தமானியொன்றை வெளியிட்டுள்ளது.

உற்பத்தியாளர்கள், விநியோகத்தர்கள், களஞ்சியசாலை உரிமையாளர்கள் அல்லது வர்த்தகர்களால் கொள்வனவு செய்யப்பட்டு கொள்கலன்களில் அல்லது விற்பனை நிலையங்களில் வைத்திருக்கும் பொருட்களுக்கு இந்த வர்த்தமானி பொருந்தும்.

அதற்கமைய, பொருளொன்றை தமக்கு விநியோகித்த உற்பத்தியாளர், விநியோகத்தர் அல்லது வர்த்தகரினால் வழங்கப்படும் எழுத்துமூல அல்லது அச்சிடப்பட்ட வகையிலான பற்றுச்சீட்டினை வர்த்தகர்கள் தம் வசம் வைத்திருக்க வேண்டும் என வர்த்தமானியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனைத்தவிர பொருளை வழங்குபவரின் பெயர், விலாசம், கொள்வனவு செய்த திகதி, விலை, பொருள் வகை, நிறை, பொருள் இலக்கம் என்பன பற்றுச்சீட்டில் குறிப்பிடப்பட்டிருந்தால் மாத்திரமே குறித்த பொருளை வழங்க முடியும் எனவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அந்தத் தகவல்கள் அடங்காத பொருட்களை விற்கவோ, சேமித்து வைக்கவோ, விநியோகிக்கவோ, விற்பனைக்கு வழங்கவோ அல்லது விற்பனைக்குக் காட்சிப்படுத்தவோ கூடாது என்று நுகர்வோர் விவகார அதிகார சபை வெளியிட்டுள்ள வர்த்தமானி அறிவித்தலூடாக தெரிவித்துள்ளது.

## ஜனாதிபதிக்கு பதில் பிரதமர்...

யோ. தர்மராஜ்

ஜனாதிபதி பதவி விலகுமாறு கோரும்போது பிரதமரை பதவி விலகச் சொல்வதானது, தலை வலி இருக்கும் போது, உடல் வலிக்கும் மருந்து கொடுப்பதாகும். அதில் எவ்வித பயனுமில்லை என நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார்.

நாட்டின் நிலைமை குறித்தும் ஜனாதிபதி பதவி விலகுமாறு கோரும் மக்களின் கோரிக்கை குறித்தும் நேற்று (28) ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஜனாதிபதியை வீட்டுக்குச் செல்லுமாறு கோரும் நிலைப்பாடு இன்று வந்ததல்ல. அன்று ஜே.ஆரை கொல்ல வேண்டும் என்று கூறினர். நான் நினைக்கிறேன், இவற்றுக்கு குழப்பமடையாது, அவர்கள் எதற்காக இவ்வாறு கூறிகின்றனர் என்பதை ஆராய்வதைவிடுத்து, தலைவலி இருக்கும் போது, உடல் வலிக்கு மருந்து கொடுப்பதில் பயனில்லை.

ஜனாதிபதியாக இருக்கட்டும், பிரதமராக இருக்கட்டும், எதிர்க்கட்சித் தலைவராக இருக்கட்டும் யாராக இருந்தாலும் தீர்க்கமான முடிவுகளை எடுக்க வேண்டும். தீர்க்கமான முடிவுகளை எடுத்து மக்களின் பிரச்சினைகளுக்கு பதிலளிக்க வேண்டும். பிரச்சினைகளை மூடி மறைப்பதோ அல்லது நோயில்லாது வேறொரு நோய்க்கு மருந்து கொடுப்பதிலும் எவ்வித பயனுமில்லை – என்றார்.

## ஆளுந்தரப்பு கட்சித் தலைவர்களை...

ஜனாதிபதி மாளிகையில் இடம்பெறவுள்ளதுடன், இதில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி கலந்துகொள்ளாது என தெரிவித்திருந்தபோதும் இறுதிநேரத்தில் அக்கட்சி கலந்துகொள்ள தீர்மானித்துள்ளதாக அறிவித்துள்ளது.

நாடு முகம்கொடுத்த நெருக்கடிகளுக்கு தீர்வு காண வேண்டுமாக இருந்தால் நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அனைத்து கட்சிகளையும் ஒன்றிணைத்த சர்வகட்சி அரசாங்கம் ஒன்றை அமைக்குமாறு மகாநாயக்க தேரர்கள் உள்ளிட்ட பல தரப்பும் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

இந்த நிலையில், இந்த கோரிக்கைக்கு அமைய இடைக்கால அரசாங்கம் ஒன்றை அமைப்பது குறித்து ஜனாதிபதி தீவிரமாக ஆராய்ந்து வருவதுடன், பிரதமர் உள்ளிட்ட அரசாங்கம் பதவி விலகியவுடன் இடைக்கால அரசாங்கம் அமைக்கப்படும் என ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

இதன் முதற்கட்டமாக இடைக்கால அரசாங்கத்தின் தன்மை, பதவி மற்றும் பொறுப்புகளின் பங்கீடு, கால வரை குறித்து கலந்துரையாடுவதற்காக ஆளுந்தரப்பிலுள்ள கட்சித்தலைவர்களுக்கும் அரசிலிருந்து வெளியேறி சுயாதீனமாக செயற்படும் கட்சித் தலைவர்களுக்கும் இன்று (29) அழைப்பு விடுத்துள்ளார்.

அதற்கமையவே, இன்று (29) காலை 10.30 மணிக்கு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில் இந்த கலந்துரையாடல் இடம்பெறவுள்ளது. எனினும், இந்த அழைப்பை பல கட்சிகள் ஏற்றுக்கொள்ளவில்லை என்றும் சில கட்சிகள் அழைப்பு குறித்து ஆராய்ந்து முடிவெடுத்துள்ளதாகவும் அறிய முடிகின்றது. அதன்படி, தங்களுடைய கட்சியிலிருந்து வெளியேறி, இராஜாங்க அமைச்சுகளை பெற்றுக்கொண்ட சுரேன் ராகவன் மற்றும் சாந்த பண்டார ஆகியோரை பதவிகளிலிருந்து விலக்கினால் தான் ஜனாதிபதியின் அழைப்பை ஏற்று இன்று (29) நடைபெறும் கலந்துரையாடலில் கலந்துகொள்வதாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அறிவித்துள்ளது.

இதேவேளை, சுயாதீனமாக செயற்படும் சில கட்சித் தலைவர்களும் இந்த சந்திப்பை புறக்கணிக்கவுள்ளதாக அறிய கிடைத்தன. பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பதவி விலக மறுப்பதால், இடைக்கால அரசாங்கம் குறித்து கலந்துரையாடுவதில் எவ்வித பயனுமில்லை என்பதால் இச் சந்திப்பை புறக்கணிக்கவுள்ளதாக அறிய முடிகின்றது. எனினும், ஜனாதிபதியின் அழைப்பை ஏற்று சிலவேளை சந்திப்புக்குச் சென்று தங்களுடைய நிலைப்பாட்டை முன்வைக்கலாம் என்ற நிலைப்பாட்டிலும் அக் கட்சிகள் இருப்பதாக அறிய முடிந்தன.

## அத்தியாவசியப் பொருட்கள்...

அத்தோடு, நாட்டில் பாரிய பிரச்சினைகள் இருக்கின்றன. உண்மைகளை மறைக்க முடியாது. எனவே, மக்களுக்கு உண்மைகளை கூறுவோம் என்றே நிதி அமைச்சர் கூறியதாகவும் அவர் தெரிவித்தார்.

சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்று (28) நாடாளுமன்ற வளாகத்தில் இடம்பெற்ற கட்சித் தலைவர் கூட்டத்தில் கலந்துகொண்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

கட்சித் தலைவர் கூட்டத்தில் பேசப்பட்ட விடயங்கள் குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்,

நாட்டின் நெருக்கடி நிலைமை குறித்து ஆராய்வதற்காக சபாநாயகர் கட்சித் தலைவர் கூட்டத்திற்கு அழைப்பு விடுத்திருந்தார். அதன்படி, வலுசக்தி மற்றும் மின்சக்தி அமைச்சரான காஞ்சன விஜேசேகர, எரிவாயு துறை அமைச்சர் செஹான் சேமசிங்க, நிதி அமைச்சர் அலி சப்ரி ஆகியோரும் அழைக்கப்பட்டிருந்தனர். இவர்களின் அமைச்சிலுள்ள அதிகாரிகளும் கலந்துகொண்டிருந்தனர். எனினும், நுகர்வோர் தொடர்பான அதிகார சபையின் எந்தவொரு அதிகாரிகளும் கலந்துகொள்ளவில்லை. எரிவாயு மற்றும் ஏனைய அனைத்து பொருட்களின் விலைகள் அதிகரிக்கும் பொறுப்புள்ள அதிகாரிகள் கலந்துகொள்ளாதது குறித்து நாங்கள் அதிருப்தியையும் வெளியிட்டோம்.

இதனையடுத்து, நாட்டு மக்கள் முகம் கொடுத்துள்ள நெருக்கடி குறித்தும் அவர்களுக்கு மானியம் வழங்குவது குறித்தும் கட்சிபேதமின்றி கலந்துரையாடினோம். குறிப்பாக, மின்சார துறைக்குள் பாரிய பொறியியலாளர்களின் மாபியா இருப்பதாக தலைவரின் வாயின் ஊடாகவே கூறினார். அவர்கள் சூரிய சக்தி மின் உற்பத்திக்கு பெரும் தடையை ஏற்படுத்துவதாகவும் அவர்களுக்கிடையில் பாரிய டீசல் மாபியா இருப்பதாகவும் அவர் கூறினார். எந்தவொரு ஆட்சி வந்தாலும் மின் கட்டணம் குறித்து தீர்மானிப்பது பெரும் சவாலாக அமையும் என கூறப்பட்டது. ஆனால், தற்போது மின் கட்டணம் அதிகரிக்கப்படாது என அமைச்சர் கூறினார்.

அமைச்சர்களான காஞ்சன மற்றும் செஹான் ஆகியோர் புதியவர்கள் என்பதால் அவர்கள் தங்களுடைய செயற்பாடுகளை முன்னெடுப்பதற்கு நாங்கள் உதவிகளை வழங்குவோம் எனத் தெரிவித்தோம். எனினும், அமைச்சராக இருக்கட்டு அமைச்சின் செயலாளர்களாக இருக்கட்டும், அனைவருமே தங்களுக்கு நிதியும் டொலரும் இல்லை என்றே கூறினர்.

எரிவாயு மற்றும் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படாதிருப்பதற்கு இரு அமைச்சர்களுக்கும் பொறுப்புக் கூற முடியவில்லை. எதிர்வரும் சில மாதங்களுக்கு தட்டுப்பாடுகளின்றி முன்னோக்கிச் செல்ல முடியாது என்பதற்கு இரு அமைச்சர்களாலும் உறுதியளிக்க முடியவில்லை. நிதி அமைச்சரினாலும் கூற முடியாது போனது.

இறுதியில் நாட்டில் பாரிய பிரச்சினைகள் இருக்கின்றன. உண்மைகளை மறைக்க முடியாது. எனவே, மக்களுக்கு உண்மைகளை கூறுவோம் என்றே நிதி அமைச்சர் கூறினார் - என்றார்.

## ஹர்த்தாலால் ஸ்தம்பிதம்...

யோ. தர்மராஜ்

நாடு எதிர்நோக்கியுள்ள நெருக்கடிக்கு தீர்வு பெற்றுக்கொள்ள வேண்டுமாயின் ஜனாதிபதி மற்றும் பிரதமர் உடனடியாக பதவி விலக வேண்டும் எனக்கோரி, 'மக்கள் கோரிக்கைகளுக்கு மதிப்பளித்து அரசாங்கம் வீட்டுக்குச்செல்' என்ற தொனிப்பொருளில் ஆயிரத்திற்கு அதிகமான தொழிற்சங்கங்கள் இணைந்து நாடளாவிய ரீதியில் முன்னெடுத்த ஒருநாள் வேலை நிறுத்தப் போராட்டத்தால் முழு நாடும் ஸ்தம்பிதமடைந்தது.

வேலை நிறுத்தப் போராட்டத்திற்குஆதரவளித்து நாடு பூராகவும் போராட்டங்களும் ஆர்ப்பாட்டப் பேரணிகளும் முன்னெடுக்கப்பட்டன. இதனால் பல துறைகள் முற்றாக பாதிக்கப்பட்டன.

நாட்டிலுள்ள அரச, தனியார், அரை அரச துறைகளிலுள்ள ஆயிரத்துக்கு மேற்பட்ட தொழிற்சங்கங்கள் நாடு பூராகவும் நேற்று (28) ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டன. இதில் ஆசிரியர்கள், துறைமுகம், பொது போக்குவரத்து, பொருளாதார மத்திய நிலையங்கள், தபால், சுங்கம், வங்கி, மின்சாரத்துறை, சுகாதாரம், சமுர்த்தி, தனியார் தொழிற்துறை, எரிபொருள் விநியோகம், புகையிரத்துறை மற்றும் பெருந்தோட்டத்துறை என பல துறைகளைச் சேர்ந்த தொழிற்சங்கங்களே இவ்வாறு ஒரு நாள் வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டன.

இதனால், கொழும்பு உள்ளிட்ட நாடு பூராகவும் உள்ள பிரதான நகரங்களில் கடைகள் மூடப்பட்டிருந்தமையால் நகரங்கள் முற்றாக முடங்கி கிடந்தன. கொழும்பில் நாட்கூலித் தொழிலாளர்கள் மற்றும் நாட்டாமை தொழிலாளர்களின் தொழில்களும் முற்றாக முடங்கிப் போயிருந்தன.

பொருளாதார மத்திய நிலையங்கள் மற்றும் மரக்கறி சந்தைகளும் மூடப்பட்டிருந்தமையினால் பல சந்தையில் மரக்கறிகள் தேங்கிக் கிடந்தன. ஆசிரியர்களின் வருகையின்மையால் பாடசாலைகளுக்கு மாணவர்களின் வருகையின்றி வகுப்பறைகளும் வெறிச்சோடி கிடந்ததுடன், சில பாடசாலைகள் காலை முதலே மூடப்பட்டதையும் காண முடிந்தது.

கொழும்பில் ஏனைய நாட்களில் சன நெருக்கடியாக காணப்படும் ஆட்பதிவு திணைக்களம், குடிவரவு, குடியகழ்வு திணைக்களம் என்பனவும் மக்கள் நடமாட்டமின்றி வெறிச்சோடி கிடந்தன. சில அதிகாரிகள் வருகைதந்தபோதிலும் வேலை நிறுத்தத்திற்கு ஆதரவளித்து வீடுகளுக்கு திரும்பிச் சென்றதால் அத்துறைகளின் நிர்வாக செயற்பாடுகள் முற்றாக முடங்கிக் கிடந்தன.

ரயில் திணைக்களத்தின் வேலை நிறுத்தப் போராட்டம் மற்றும் தனியார் மற்றும் அரசாங்க போக்குவரத்து பஸ்களின் போக்குவரத்தும் குறைவாக காணப்பட்டமையால் பணிக்குச் செல்லும் மக்கள் நீண்ட நேரம் வீதியில் காத்திருக்க வேண்டியிருந்ததுடன், போதியளவான பஸ்கள் போக்குவரத்தில் ஈடுபடுத்தப்படாதமையினால், சேவையில் ஈடுபட்ட பஸ்களிலும் சன நெரிசல் காணப்பட்டன. இதனால் பணிக்குச் சென்ற மக்கள் பெரும் சிரமங்களுக்கு முகம் கொடுக்க நேரிட்டன. மேலும், ரயில் போக்குவரத்து முற்றாக ஸ்தம்பிதமடைந்திருந்தமையினால் பணி முடித்துச் செல்ல காத்திருந்த மக்களும் பெரும் அசௌகரியங்களுக்கு முகம் கொடுக்க நேரிட்டது.

பெருந்தோட்டத்துறையிலும் ஒரு நாள் வேலை நிறுத்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டதால் தொழிலாளர்கள் தொழிக்குச் செல்லாது, வீதிகளில் இறங்கி போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனால், தேயிலை தொழிற்துறை முற்றாக ஸ்தம்பிதமடைந்திருந்தது.

எரிபொருள் விநியோகங்களும் தடைப்பட்டிருந்தமையினால் பல எரிபொருள் நிலையங்களுக்கு உரிய எரிபொருள் கிடைக்கப்பெறவில்லை என்பதுடன், பல பகுதிகளில் எரிபொருள் நிலையங்கள் முற்றாக ஸ்தம்பிதமடைந்திருந்தன. அரச துறைகளை நம்பி வருகைதந்த மக்களும் பெரும் அசௌகரியங்களுக்கு முகம் கொடுக்க நேரிட்டதாக மக்கள் கவலை வெளியிட்டனர்.

இதேவேளை, உரிய போக்குவரத்துகள் இன்மையால் பல தொழிற்துறைகளும் மக்களின் அன்றாட செயற்பாடுகளும் முற்றாக ஸ்தம்பிதமடைந்திருந்தன. இதேவேளை, நாடு பூராகவும் ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டதுடன், நகரங்கள் முழுவதும் கறுப்பு கொடிகள் தொங்கவிடப்பட்டிருந்தன.

அதேபோன்று, நேற்று (28) முன்னெடுக்கப்பட்ட ஒருநாள் வேலை நிறுத்தப் போராட்டத்திற்கு ஆதரவளித்து நாடளாவிய ரீதியில் போராட்டம் மற்றும் ஆர்ப்பாட்டப் பேரணிகளும் முன்னெடுக்கப்பட்டன. இதனால், வீதிகள் எங்கும் மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர். இந்த ஒரு நாள் அடையாள வேலை நிறுத்தப் போராட்டம் பெரும் வெற்றியளித்துள்ளதாக தொழிற்சங்கங்கள் தெரிவித்துள்ளன.

# தியவன்னா நாடாளுமன்ற கட்டடத் தொகுதிக்கு 40 வருடங்கள் பூர்த்தி



இலங்கை நாடாளுமன்றம் ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டேயிலுள்ள தற்போதைய கட்டடத்துக்கு கொண்டுவரப்பட்டு இன்றுடன் (29) 40 வருடங்கள் பூர்த்தியடைகின்றன.

காலிமுகத்திடலில் அமைந்திருந்த நாடாளுமன்றக் கட்டடத்தில் போதிய இடவசதி இன்மையால் அதனை வேறொரு இடத்துக்கு மாற்றவேண்டிய தேவை ஏற்பட்டது. இதன்பின்னர் கோட்டே பிரதேசத்தில் நாடாளுமன்றத்துக்குப் புதிய கட்டடத்தை அமைப்பதற்கான யோசனை முன்வைக்கப்பட்டது.

இதற்கமைய 1979ஆம் ஆண்டு ஸ்ரீஜயவர்தனபுர கோட்டே பிரதேசத்தில் காணப்பட்ட 16 ஏக்கர் சிறிய தீவில் புதிய நாடாளுமன்றக் கட்டடத்துக்கான பணிகள் ஆரம்பமாகின.

அப்போதைய ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்தனவின் வழிகாட்டலின்கீழ் அப்போதைய பிரதமர் ஆர்.பிரேமதாசவினால் இக்கட்டடத்தைக் அமைக்கும் பணிகள் கண்காணிக்கப்பட்டன. இதற்கமைய ஜெப்ரி பாவா பிரதான கட்டடக் கலைஞராகத் தெரிவுசெய்யப்பட்டதுடன், புதிய கட்டடத்தை அமைப்பதற்கான பணிகளை ஜப்பானிய நிறுவனமொன்று பொறுப்பேற்றிருந்தது.

இலங்கையின் பாரம்பரியத்தை அடிப்படையாகக்கொண்ட நாடாளுமன்ற கட்டடத்தின் அனைத்து கட்டடக்கலை நடவடிக்கைகளிலும் தேசியத்துக்கு முன்னுரிமை வழங்கப்பட்டது.

இந்தக் கட்டடத்தின் கட்டுமானப் பணிகள் 1982ஆம் ஆண்டு முடிவடைந்ததுடன், 1982 ஏப்ரல் 29ஆம் திகதி ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே பகுதியில் அமைக்கப்பட்ட புதிய நாடாளுமன்றம் உத்தியோகபூர்வமாகத் திறந்துவைக்கப்பட்டது. இதற்கமைய அதுவரை காலிமுகத்திடலிலிருந்த நாடாளுமன்றம் ஸ்ரீஜயவர்தனபுர கோட்டே புதிய கட்டடத்துக்கு கொண்டுவரப்பட்டது.

புதிய நாடாளுமன்றக் கட்டடம் திறந்துவைக்கப்பட்டதுடன், ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே நகரம் இலங்கையின் நிர்வாகத் தலைநகரமாக மாறியது.

நாகை மரங்களை வரிசையாகக்கொண்ட பிரதான சாலையின் ஊடாகத் தற்போதைய நாடாளுமன்ற வளாகத்துக்கான நுழைவு அமைந்துள்ளது. நாடாளுமன்றம் பொது மக்களுடன் நெருக்கமாக இருப்பதற்கு ஏதுவாக புராதன கட்டடக் கலை வடிவமான 'அம்பலம்' என்ற கருத்துருவாக்கத்தின் கீழ் அமைக்கப்பட்ட நிர்மாணங்களை இங்கு காணலாம். நாடாளுமன்ற உறுப்பினர்கள் தாம் பிரதிநிதித்துவம் செய்யும் மக்களை சந்திப்பதற்கான இடமாக இது அமைக்கப்பட்டுள்ளது. அத்துடன் நாடாளுமன்ற நுழைவாயிலுக்கு அருகில் நீர் நிரம்பிய குளங்களையும் காணமுடியும்.

நாடாளுமன்றத்தின் பிரதான கதவுகளுக்கு அருகில் கலாநிதி மஞ்சுஸ்ரீ சித்திரக் கலைஞரினால் வரையப்பட்ட சுவரோவியங்களைப் பார்க்க முடியும். சபா மண்டபத்தின் பிரதான கதவு செப்பு மற்றும் வெள்ளி மென்பூச்சைக் கொண்டிருப்பதுடன், இதில் புராதன கல்வெட்டுப் பாணியில் இலங்கை அரசியலமைப்பின் பாயிரம் சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழிகளில் அழகாகச் செதுக்கப்பட்டுள்ளன.

செவ்வக வடிவான சபாமண்டபம், முழுக் கட்டடத்தினதும் மையப்பகுதியில் இரண்டு மாடிகளின் உயரத்தை உள்ளடக்குகின்றது. மன்னர்கள், விகாரைகள் மற்றும் கோறளைகளினது 18 கொடிகள் காட்சியளிக்கின்றன. மேலும் சபாமண்டபத்தின் மத்தியில் தொங்கவிடப்பட்டுள்ள வெள்ளி மென்பூச்சைக் கொண்ட பாரிய மின்விளங்கு சபா மண்டபத்துக்கு அபிமானத்தைச் சேர்க்கிறது.

## திருவிழா தருணத்தில் வீடுகளில் திருட்டு

ஆலய திருவிழா தருணத்தை சாதகமாக்கி , இரண்டு வீடுகளில் திருட்டு இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் வட்டுக்கோட்டை மூன்றாம் வேரம் பகுதியில் நேற்று முன்தினம் இரவு நடந்துள்ளது .

வீட்டார் ஆலயத்துக்குச் சென்றமையால், ஒரு வீட்டில் 6 ஒலி அமைப்பு சாதனங்களும் இன்னொரு வீட்டில் மோட்டார்சைக்கிள் பின்புற இருக்கைக்கு கீழிருந்த ஒருதொகை பணமும் திருடப்பட்டுள்ளன.

கிராம மக்களுக்கு தகவல் பரவியதையடுத்து விசேட தேடுதலில் சந்தேகத்துக்கிடமாக நடமாடிய இளைஞர் ஒருவரை மடக்கிப் பிடித்து விசாரித்தனர். அவரிடமிருந்து ஒருதொகை பணத்தையும் ஒலிச்சாதனங்களையும் கைப்பற்றினர்.

மேலும் இருவரை மடக்கிப் பிடித்த மூளாய் வேரம் சனசமூக நிலைய நிர்வாகத்தினர் அவர்களை பொலிஸாரிடம் ஒப்படைத்தனர் .

## முச்சக்கரவண்டி விபத்தில் அதிபர் உயிரிழப்பு

### நீண்டநேரம் வரிசையில் நின்று பெற்றோல் நிரப்பிய பின் மயக்கமடைந்ததால் துயரம்

*(பெல்மதுளை செய்தியாளர்)*

தனது முச்சக்கரவண்டிக்கு பெற்றோல் நிரப்பிவிட்டு வீடு திரும்பும் வழியில் மயக்கமுற்று விபத்துக்குள்ளாகி படுகாயமடைந்த நிலையில் சிகிச்சைபெற்றுவந்த பாடசாலை அதிபர் ஒருவர் பரிதாபமாக உயிரிழந்த சம்பவமொன்று இரத்தினபுரியில் நடைபெற்றுள்ளது.

இச்சம்பவத்தில் நிவித்திகலை பின்கந்த பிரைட்டன் தமிழ் வித்தியாலய அதிபர் ஏ.ஜே.கிறிஸ்டோபர் (வயது 49) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

முச்சக்கரவண்டிக்கு பெற்றோல் நிரப்பும் பொருட்டு கடந்த 18 ஆம் திகதி திங்கட்கிழமை அதிகாலை 05 மணியளவில் இரத்தினபுரி நகரிலுள்ள எரிபொருள் நிரப்பும் நிலையத்திற்கு சென்று நீண்ட வரிசையில் காத்திருந்து முற்பகல் 10 மணியளவில் பெற்றோலை நிரப்பிய பின்னர் தமது முச்சக்கரவண்டியில் வீடு திரும்பியபோது அவருக்கு திடீரென மயக்கம் ஏற்படவே முச்சக்கரவண்டி விபத்துக்குள்ளாகி இவரது தலையில் அடிபட்டு படுகாயமடைந்த நிலையில் பிரதேச மக்களால் இரத்தினபுரி பொது வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

இவ்வாறு சேர்க்கப்பட்ட இவருக்கு தலையில் அவசர அறுவை சிகிச்சை செய்யட்டது. அறுவை சிகிச்சையின் பின்னர் அவசரப்பிரிவில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில் சிகிச்சை பலனளிக்காது நேற்றுக் காலை 3 மணியளவில் காலமானதாக பொலிஸார் தெரிவித்தனர்.

## வீடியோ கேம் விளையாடி வந்த இளைஞன் விரக்தியில் உயிர் மாய்ப்பு

### இளவாலையில் சம்பவம்

அலைபேசியில் தொடர்ச்சியாக வீடியோ கேம் விளையாடிவந்த 22 வயதுடைய இளைஞன் விரக்தியில் தவறான முடிவெடுத்து உயிரை மாய்த்துள்ளார்.

இந்தச் சம்பவம் இளவாலையில் நேற்று (28) இடம்பெற்றுள்ளது.

அலைபேசியில் ஆயுதப் போர் வீடியோ கேம் விளையாடுவது இளைஞனின் அண்மைக்கால நடவடிக்கையாக இருந்துவந்துள்ளது.

அதில் மூழ்கிப் போன அவர், இன்று காலை அறையில் தூக்கில் தொங்கிய நிலையில் சடலமாக மீட்கப்பட்டமை விசாரணையில் தெரியவந்துள்ளது.

இளைஞனின் சடலத்தில் காதுகளில் மாட்டிய ஹெட்செட் மற்றும் பொக்கெட்டில் அவரது அலைபேசி என்பன காணப்பட்டுள்ளன.

சடலம் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டு உடற்கூற்றுப் பரிசோதனை மற்றும் இறப்பு விசாரணையின் பின்னர் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

இதேவேளை, வீடியோ கேம் விளையாடிய பல இளைஞர்கள் இந்தியாவில் உயிர் மாய்த்தமை குறிப்பிடத்தக்கது.





இரத்மலானையில் அமைந்துள்ள தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபைக்கு முன்னால் சபை ஊழியர்களால் நேற்று ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.

(படங்கள்: பி.எம். முக்தார்)

## 30 மாதங்களில் நாட்டை வங்குரோத்தாக்கியது யார்?

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித் கலிகமுவவில் கேள்வி





நமது நாட்டை 30 மாதங்களுக்குள் ராஜபக்ஷ குடும்பம் வங்குரோத்து அடைந்த நாடாக மாற்றிவிட்டதாக தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், இந்நாட்டின் தேசிய வளங்கள், தேசிய சொத்துகள், தேசிய நிதி என்பவற்றை திருட்டுத்தனமாக கொள்ளையடித்ததன் காரணமாகவே நாடு இவ்வளவு வங்குரோத்து நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

அடக்குமுறைமிக்க கொடுங்கோல் அரசாங்கத்திற்கு எதிராக ஐக்கிய மக்கள் சக்தி ஏற்பாடு செய்த "சுதந்திரத்திற்கான போராட்டம்" ஐக்கிய சக்தி பாதயாத்திரையின் மூன்றாம் நாள் நிகழ்வுகள் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவின் தலைமையில் நேற்று (28) கலிகமுவ நகரில் ஆரம்பமாகியது.

இதன்போது உரையாற்றுகையிலேயே சஜித் பிரேமதாச மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஊழலையும் திருட்டையும் கட்டுப்படுத்தும் முகமாக சுதந்திரமான சக்தி வாய்ந்த ஒரு நிறுவன கட்டமைப்பை ஸ்தாபிப்பதாகவும், அதை எந்த வகையிலும் மாற்றமுடியாதவாறு நிரந்தர நிறுவனமாக அதிகாரமளிக்கப்படும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சக்தியினால் அமையப்பெறும் ஓர் அரசாங்கத்தின் கீழ் திருடர்களை பிடிக்கும் பொறுப்பு பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகாவுக்கே வழங்கப்படும் என தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், எக்காரணத்தைக்கொண்டும் இந்நிலைப்பாடு மாறாது எனவும் அவர் தெரிவித்தார்.

மக்களின் பணத்தை திருடிய குற்றவாளிகள் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு தண்டிக்கும் பொறுப்புசார் அதிகாரம்,முப்பது வருட யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவந்த சரத் பொன்சேகாவிடம் கையளிக்கப்படும் எனவும் அவர் தெரிவித்தார்.

வேறு எவருடனும் ஐக்கிய மக்கள் சக்திக்கு எந்த டீலும் இல்லை என தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர், இந்நாட்டிலுள்ள 220 இலட்சம் மக்களுடனேயே தனக்கு டீல் உள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த பாதயாத்திரையில் ஐக்கிய மக்கள் சக்தியைப் பிரதிநிதித்துவப்படுத்தும் மக்கள் பிரதிநிதிகள் உட்பட ஆயிரக்கணக்கானோர் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.










ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசாங்கத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து அரச, தனியார்துறை ஊழியர்கள் புத்தளத்தில் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (படப்பிடிப்பு: ரஸீன் ரஸ்மின்)



நாடு முழுவதும் பல்வேறு தொழிற்சங்கங்கள், அமைப்புகள் இணைந்து ஒருநாள் போராட்டமொன்றை நேற்று முன்னெடுத்திருந்தன. ஜனாதிபதி கோட்டாபய தலைமையிலான அரசாங்கத்தை உடனடியாகப் பதவி விலகுமாறு கோரியே இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

கல்வி, சுகாதாரம், போக்குவரத்து, துறைமுகங்கள், மின்சாரம், எரிசக்தி, தபால், பெருந்தோட்டங்கள் என அனைத்துத்துறைகளைச் சார்ந்தோரும் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

இதன் காரணமாக அனைத்து தொழிற்றுறைகளும் ஸ்தம்பிதமடைந்திருந்தன. நாடு இக்கட்டான சூழ்நிலையை எதிர்நோக்கியுள்ள நிலையில், இதற்கு உடனடியாகத் தீர்வுகாணுமாறு தொழிற்சங்கங்கள் வலியுறுத்தியுள்ளன.

“மக்கள் கருத்துக்குப் பணிந்து வீடு செல்லவும்” எனும் தொனிப்பொருளில் நேற்று முன்னெடுக்கப்பட்ட அடையாள பணிப்புறக்கணிப்புக்கு ஆயிரத்துக்கும் மேற்பட்ட தொழிற்சங்கங்கள் இணைந்ததாக தொழிற்சங்கக் கூட்டமைப்பு தெரிவித்தது.

இதேவேளை, நாடு முகங்கொடுத்துள்ள நெருக்கடிகளுக்குத் தீர்வாக நாடாளுமன்றத்திலுள்ள அனைத்துக் கட்சிகளையும் உள்ளடக்கிய இடைக்கால அரசாங்கமொன்றை அமைப்பதற்கு நிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி என்ற வகையில், கொள்கை அடிப்படையில் இணக்கத்தைத் தெரிவிப்பதாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்‌ஷ தெரிவித்துள்ளார்.

அதன்படி, தற்போதைய பிரதமர் உள்ளிட்ட அமைச்சரவை பதவி விலகியவுடன் அமையவுள்ள சர்வகட்சி அரசாங்கத்தின் விடயம், நடைமுறையிலிருக்கும் காலம், அதன் பொறுப்புகளை வழங்கும் நபர்கள் யார் என்பவை உள்ளிட்ட ஏனைய அனைத்து விடயங்களையும் பேச்சுவார்த்தை நடத்தித் தீர்மானிக்க வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில், ஜனாதிபதி என்னை இராஜினாமா செய்யுமாறு ஒருபோதும் கூறவில்லை. அவ்வாறு கூறமாட்டார் என உறுதியாக நம்புகிறேன் என பிரதமர் மஹிந்த ராஜபக்‌ஷ தெரிவித்துள்ளார்.

பிரதேச சபைத் தவிசாளர்கள், மேயர்கள் மற்றும் மாவட்டத் தலைவர்களுடனான சந்திப்பின்போதே பிரதமர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். பிரதமர் மஹிந்த ராஜபக்‌ஷ தனது பதவியை இராஜினாமா செய்யக் கூடாது என இந்தக் கூட்டத்தின்போது ஏகமனதாகத் தீர்மானம் எடுக்கப்பட்டது.

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42,
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2022, ஏப்ரல் 29ஆம் திகதி, வெள்ளிக்கிழமை

# ஜனநாயகக் குரலுக்கு செவிசாய்க்க வேண்டும்

“இந்தப் பொருளாதார சவாலிலிருந்து தப்பித்து ஓடமாட்டோம். எங்களிடம் குறுகிய கால மற்றும் நீண்ட காலப் பொருளாதார முகாமைத்துவக் கொள்கைகள் உள்ளன. அதற்கமைய இந்த சவாலை சமாளிக்க முடியும் என்று நாங்கள் நம்புகிறோம்” என்று பிரதமர் மேலும் தெரிவித்துள்ளார்.

நாட்டை வழிநடத்த வேண்டிய ஜனாதிபதியும், பிரதமரும் இருவேறு நிலைப்பாட்டிலிருப்பது இங்கே வெளிப்படையாகியுள்ளது. ராஜபக்‌ஷ குடும்பத்தின் சுயநலமும், அதிகார விருப்பமும் நாட்டை இக்கட்டான சூழ்நிலைக்குத் தள்ளியுள்ளதாக மக்கள் குற்றம் சுமத்திவரும் நிலையில், அரசியல் நெருக்கடியை மேலும் அதிகரிப்பதாகவே இவர்களின் செயற்பாடுகள் அமைந்திருக்கின்றன.

அரசாங்கத்துக்கு எதிராக தொடர்ச்சியாக நாடு முழுவதும் போராட்டங்கள் இடம்பெற்று வருகின்றன. காலிமுகத்திடலில் நேற்று 20 ஆவது நாளாகவும் போராட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

இந்த நாட்டிலுள்ள ஒட்டுமொத்த மக்களும் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். ஜனாதிபதி கோட்டாபய தலைமையிலான அரசாங்கத்தைப் பதவி விலகுமாறே அவர்கள் கோரிக்கை விடுக்கிறார்கள். ஆனால், அதற்கு செவிசாய்ப்பதற்கோ, பதில் வழங்குவதற்கோ அரசாங்கம் தயாராக இல்லை. மாறாக, பதவியை எவ்வாறு தக்கவைத்துக்கொள்வது என்றே சிந்திக்கிறார்கள்.

நாடு மிக மோசமான நிலையிலிருக்கிறது. இனிவரும் நாட்களில் நிலைமை மிக மோசமாக மாறும். அதனை எதிர்கொள்வதற்கு அரசியல் ஸ்திரத்தன்மை அவசியமாகும். ஆயினும், தற்போதைய உடனடித் தேவை குறித்து ஆட்சியாளர்கள் அக்கறை கொள்வதாகத் தெரியவில்லை.

தம்மிடம் குறுகிய, நீண்டகால பொருளாதார முகாமைத்துவக் கொள்கைகள் இருப்பதாக பிரதமர் மஹிந்த ராஜபக்‌ஷ நேற்று முன்தினம் தெரிவித்திருக்கிறார். அப்படியானால் இவ்வளவு காலமாக அந்தக் கொள்கைகளை நடைமுறைப்படுத்தாதது ஏன்? அதற்குத் தடையாக இருந்த காரணங்கள் எவை?

ஜனாதிபதியினதோ, பிரதமரினதோ அண்மைக்கால அறிவிப்புகளை மக்களை ஏமாற்றுவதற்காக சாயம் பூசப்பட்ட வெறும் வார்த்தைகளாகவே பார்க்க முடிகின்றது. ஏதோ ஒருவகையில் மக்களைத் திசைதிருப்பி தற்காலிகமாக பிரச்சினையிலிருந்து விடுபடுவதற்காக வழிமுறைகளை அவர்கள் கையாள்வதாகவே தெரிகிறது.

ஆக, மனச்சாட்சியின்படி செயற்படாமல் மக்களின் போராட்டங்களை கவனிக்காமல் விடுத்தால் அதன் விளைவுகள் மேலும் பல பாதிப்புகளை உண்டாக்கும். ஜனநாயகக் குரலுக்கு ஆட்சியாளர்கள் செவிசாய்க்க வேண்டும்.

அரசுக்கு எதிராக நேற்று நாடு முழுவதும் மேற்கொள்ளப்பட்ட ஹர்த்தாலும், ஆர்ப்பாட்டங்களும் கனதியான செய்தியை ஆட்சியாளர்களுக்கு சொல்லியிருக்கின்றன. அந்தச் செய்தியை புரிந்துகொள்ளத் தவறினால் வரலாற்றுத் தவறிழைத்தோரின் பட்டியலில் தற்போதைய ஆட்சியாளர்களின் பெயர் கறுப்புப் புள்ளிகளாக பதியப்படும் என்பதில் மாற்றுக்கருத்தில்லை.

# தமிழ்த்தேசியவாதி மாமனிதர் சிவராம்





மட்டக்களப்பு மண்ணில் அவதரித்த மடி.சிவராம் என்ற சொல்லின் பின்னால் உண்மை, நேர்மை, நட்பு, துல்லியம், மார்க்சீசம், தீர்க்கதரிசனம் எனப் பல்வகைப் பண்புகளும், பல்துறை ஆற்றலும் விரிந்துகிடக்கின்றது. ஒப்பாரும் மிக்காருமில்லாத தனித்துவமான, உலகமே வியந்து அந்த ஊடகப் போராளியை, அரசியல் சிந்தனையாளனை, மானிடநேயவாதியை, நாட்டுப்பற்றாளனை, விடுதலை விரும்பியை, எல்லாவற்றிற்கும் மேலாக எனது மானசீகக் குருவை காலனிடம் பறிகொடுத்து 17ஆண்டுகள் கடந்து விட்டன. சிவராமுக்கு நிகர் சிவராம்தான். வேறு யாராலும் அந்த வெற்றிடத்தை ஈடுசெய்ய முடியாது.

சிவராம் 11.08.1959 இல் மட்டக்களப்பில் அவதரித்து "த புனித மைக்கல்" கல்லூரியில் கல்விகற்று பேராதனைப் பல்கலைக்கழகத்திற்குத் தேர்வானவர். 1982 இல் பல்கலைக்கழகத்தில் இருந்தபோது அன்றைய நாளில் வடகிழக்கில் இளைஞர் மத்தியில் ஏற்பட்ட எழுச்சி, இன முரண்பாட்டின் தீவிரம், கிழக்கில் மேற்கொள்ளப்பட்ட ஒடுக்குமுறையின் கொடூரம் என்பனவற்றினால் தமிழ் இளைஞர்கள் போராட்ட இயக்கங்களின் பால் சென்றபோது டி.சிவராமும் அந்த இளைஞர்களில் ஒருவராக இருந்தார்.

காந்தீயம் எனும் தன்னார்வத் தொண்டு நிறுவனத்தில் இணைந்திருந்த டி.சிவராம். பல்கலைக்கழகக் கல்வியைத் தொடர முடியாமல் தமிழர் சுய நிர்ணயத்திற்கான போராட்டத்தில் ஈடுபட்ட போராட்டக் அமைப்புகளில் ஒன்றான தமிழீழ விடுதலைக்கழக அமைப்பில் (புளொட்) இணைந்து தனது தாயகத்திற்கான பணிகளை செய்ய ஆரம்பித்தார்.

வடக்கு-கிழக்கின் மூலை முடுக்குக் கிராமங்கள் முதல் காடுகள், மலைகள் ஈறாகக் கால்நடையாகவும், உந்துருளியிலும், ஈருருளியிலும் அலைந்து திரிந்து மக்களைச் சந்தித்தவர். அவர் சென்ற இடமெல்லாம் அப்பிரதேசத்தின் சமூகப் பண்பாட்டு விழுமியங்கள், பொருளாதார வளங்கள், புவியியல் நிலைமைகள், இராணுவக் கேந்திரத்தன்மை என்பவற்றினை மிக ஆழமாகக் கிரகித்துக் கொண்டவர். இதனால்தான் பின்னாளில் அவரால் பத்திரிகைத்துறையில் ஜாம்பவானாக விளங்கமுடிந்தது.

1986இல் அதிகாரபூர்வமாக புளொட் இயக்கம் தனது அரசியல் செயற்பாட்டை யாழ்ப்பாணத்தில் நிறுத்துவதாக பிரகடனப்படுத்தும் அறிவித்தலை ஈழநாடு பத்திரிகை மூலம் வழங்கிவிட்டு யாழ்ப்பாணத்திலிருந்து வெளியேறியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

பின்னர் தனது பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், நண்பர்களின் உதவியோடு கொழும்பில் வசித்து வந்தாலும், புளொட் இயக்கத்தில் ஆதரவாக அதேநேரம் இலங்கையின் முக்கிய சிங்கள அரசியல்வாதிகளுடனும், கல்விமான்களுடனும் தொடர்புகளைப் பேணி வந்ததார்.

இதன் பின்னர் 1987 இல் நடந்த இந்திய – இலங்கை ஒப்பந்த காலத்தில் அப்போது புளொட்டின் தலைவராக இருந்த உமாமகேஸ்வரனால் புளொட் அமைப்பின் பொதுச்செயலாளராக நியமிக்கப்பட்ட போதும், புளொட் அமைப்பு மேற்கொண்ட மாலைதீவு ஆட்சிக்கவிழ்ப்பு, ஜே.வி.பியுடனான தொடர்பு, புளொட் அமைப்பின் கொள்கை விலகல், அமைப்பின் நிர்வாக ஒழுக்கச் சீர்கேடுகள் காரணமாக முற்றுமுழுதாக புளொட் அமைப்பிலிருந்து வெளியேறினார் என்பதை அவரே பல தடவை எம்முடன் கூறினார்.

அதன் பின்னர் 2000ஆம் ஆண்டில் கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கத்தின் ஆலோசகராக அவர் இருந்தார். நான் பொருளாளராக செயற்பட்டேன். இந்தக் காலத்தில்தான் தமிழீழ விடுதலைப்புலிகள் வடக்கு-கிழக்கில் 70 சதவீத நிலப்பரப்பை தன்னகத்தே வைத்து நடைமுறை அரசொன்றை நிர்வகித்த காலம்.

இந்தக் காலத்தில்தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கும் முயற்சிகள் விடுதலைப்புலிகளின் வேண்டுகோளின் நிமித்தம் முன்எடுக்கப்பட்டது. அதற்கான ஏற்பாடுகள் கிழக்கிலங்கை செய்தியாளர் சங்கத்திலிருந்த மாமனிதர் சிவராம், நான் உட்பட சில ஊடகவியலாளர்கள், பல்வேறுபட்ட அரசியல் கட்சித் தலைவர்கள், போராட்ட இயக்கத் தலைவர்களுடன் மேற்கொள்ளப்பட்டு ரெலோ தலைவர் செல்வம் அடைக்கலநாதன், ஈ.பீ.ஆர்.எல்.எவ். தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் ஆகியோரை தனித்தனியாக நானும், சிவராமும், இன்னும் சில ஊடகவியலாளர்களும் கொக்கட்டிச்சோலைக்கு அழைத்துவந்து, விடுதலைப்புலிகளின் கிழக்கு மாகாண தலைமைகளுடன் கலந்துரையாடி, அந்த முடிவுகள் வன்னிக்கு அனுப்பப்பட்டு, பலசுற்று பேச்சுவார்தைகளின் பின்னரே 2001 இல் உத்தியோகபூர்வமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவானது.

சிலர் வரலாறுகளை மறைத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கலுக்கும், விடுதலைப்புலிகளுக்கும் சம்பந்தமில்லை எனக் கூறுவது வேடிக்கையான விடயம். ஒரு இனவிடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்டு 70 சதவீத நிலம்பரப்பை வடக்கு-கிழக்கில் நிர்வகித்த விடுதலைப்புலிகள் அவர்களுக்குத் தெரியாமல் அல்லது அவர்களின் அனுமதியின்றி இன்னுமொரு அரசியல் கட்சியாக வேறொரு தரப்பை உருவாக்க விட்டிருப்பார்களா என்பது கூட அறியாமல் சிலர் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கத்தில் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு சம்பந்தமில்லை எனக் கூற முற்படுவது அப்பட்டமான பொய்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கத்தில் மாமனிதர் சிவராமின் பங்கு இருந்ததையும் மறுக்க முடியாது.

சிவராம் பத்திரிகைத்துறையாளர் மற்றும் இனப்பற்றும், நேர்மையும், துணிச்சலும் மிக்க ஊடகவாதி. ஆங்கிலம், தமிழ் என இரு மொழிகளிலும் அறிவுசார் புலமையுள்ள ஓர் அரசியல், இராணுவ ஆய்வாளன். புத்திஜீவிகள் வியக்கும் வண்ணம் இலாவகமான பொருட்செறிவுடைய சொல்லாடல்களைப் பயன்படுத்தி அலாதியாக அவருடைய பேனா ஆய்வுக்கட்டுரைகளை வரையும். தர்க்கரீதியாவும், வாசிப்போரின் அறிவியல் தேடலுக்கு நல்ல தீனியாகவும் அதேநேரம் மனதைக்கவர்ந்து பதியும் வண்ணம் மார்க்சீயக் கருத்துகள் அவருடைய ஆய்வுக்கட்டுரைகளில் பலமாகவும், ஆழமாகவும் பொதிந்து கிடக்கும். தமிழர் தாயகத்தின் புவியியல் கேந்திரத்தன்மை பிராந்திய வல்லாதிக்க புவிசார் அரசியல் நிலைப்பாடு என்பவற்றை போரியல் இராணுவ நோக்கில் ஆழமாக அலசி, ஆராய்ந்து அவர் எழுதும் இராணுவ ஆய்வுக்கட்டுரைகளை பாமர மக்கள் முதல் சிங்கள புத்திஜீவிகள் வரை படித்துப் பயன் பெற்ற வரலாறுகள் உண்டு.

இவ்வாறு பத்திரிகைத்துறையில் பல்வகைத்தன்மை கொண்டவராக விளங்கிய சிவராம் இலங்கையில் இனப்படுகொலை நிகழ்கின்றது என்பதனை வரலாற்று, அறிவியல், புள்ளிவிபரவியல் தரவுகளோடு வெளிப்படுத்துவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டிருந்தவேளை அவருக்குத் தொடர்ச்சியாக விடுக்கப்பட்ட கொலை அச்சுறுத்தல்களையும் பொருட்படுத்தாது அசாத்தியத் துணிவுடன் “இந்த மண்ணை விட்டு நான் எங்கே போவது? சாவு வருவதெனில் இந்த மண்ணிலேயே எனக்கு நிகழட்டும்” என்று உறுதிபடக்கூறி சாவின் விளிம்பில் நின்றுகொண்டும் தனது பேனாவினால் புதிய சரித்திரமொன்றைப் படைத்துக் கொண்டிந்த மாமனிதர் சிவராம் கடந்த 2005 ஏப்ரல் 28 ஆம் திகதி இரவு கொழும்பு நகரில் வைத்துக் கடத்தப்பட்டார். மறுநாள் ஏப்ரல் 29 இல் நாடாளுமன்றத்தின் அருகே அவரின் உடலம் கண்டெடுக்கப்பட்டது.

இன்று அவர் எம்மை விட்டுப் பிரிந்து 17 ஆண்டுகள் கடந்த நிலையில், இலங்கை ஆட்சியாளர்களுக்கு எதிராக சிங்கள மக்களே திரண்டு ராஜபக்‌ஷ குடும்பத்திற்கு எதிராக போராடும் நிலை ஏற்பட்டிருக்கிறது.

மஹிந்த ராஜபக்‌ஷ ஜனாதிபதியாகவும், அவரின் சகோதரரான கோட்டாபய ராஜபக்‌ஷ பாதுகாப்பு அமைச்சின் செயலாளராகவும் பதவியிலிருக்கும் காலத்திலேயே மாமனிதர் சிவராம் படுகொலை செய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.

**- பா.அரியநேத்திரன் -**

## இன்றைய நாளில்...

- ★ 1953 – ஐக்கிய அமெரிக்காவின் முதலாவது முப்பரிமாணத் தொலைக்காட்சி சோதனை ஒளிபரப்பு காட்சிப்படுத்தப்பட்டது.
- ★ 1967 – அமெரிக்க இராணுவத்தில் சேர மறுத்த காரணத்தினால், முகம்மது அலியின் குத்துச்சண்டைப் பதக்கங்கள் திரும்பப் பெற்றுக் கொள்ளப்பட்டன.
- ★ 1995 – நவக்கிரி என்ற இடத்தில் இலங்கை இராணுவத்தினரின் அவ்ரோ விமானம் 50 படையினருடன் விடுதலைப் புலிகளால் சுட்டு வீழ்த்தப்பட்டது.
- ★ 1997 – 1993 வேதி ஆயுத உடன்படிக்கை அமுலுக்கு வந்தது. வேதி ஆயுதங்கள் தயாரிப்பு தடைசெய்யப்பட்டது.
- ★ 2007 – வான்புலிகளின் இரு வான்கலங்கள் கொழும்புக்கு வடக்கே 5 கி.மீ.தொலைவிலுள்ள கொலன்னாவ எண்ணெய்க் குதங்களையும், 16 கி.மீ. தொலைவிலுள்ள கெரவலப்பிட்டி எண்ணெய்க் குதங்களையும் குண்டு வீசித் தாக்கின.

## நக்கல் நமசிவாயம்

இந்த நேரத்தில தமிழர் ஒருத்தர பிரதமர் ஆக்கினா என்ன? இனப்பிரச்சினைக்குத் தீர்வு தேடவும் தேவையில்ல...! வெளிநாடுகளும் அரசாங்கத்த பாராட்டி உதவிகள் செய்யும்தானே...!



# இந்தோனேசியா இலங்கைக்கு 3.1 தொன் மனிதாபிமான உதவிகள் நன்கொடை

வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ், இந்தோனேசியாவின் தூதுவர் திருமதி டெவி குஸ்டினா டோபிங்கை நேற்றுமுன்தினம் (27) வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சில் வரவேற்றதுடன், இந்தோனேசியா அரசாங்கத்தின் இலங்கைக்கான மனிதாபிமான உதவியின் புதிய தகவல்கள் குறித்து இந்தோனேசியத் தூதுவர் விளக்கினார்.

இலங்கையின் சுகாதார அமைச்சின் அத்தியாவசிய மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்களுக்கான கோரிக்கைக்கிணங்க, அத்தியாவசிய மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்களை உள்ளடக்கிய 517.5 மில்லியன் இலங்கை ரூபா (அண்ணளவாக 1.6 மில்லியன் அமெரிக்க டொலர்) பெறுமதியான 3.1 தொன் அளவுடைய மனிதாபிமான உதவிகளை இலங்கைக்கு வழங்க இணக்கம் வெளியிடப்பட்டது.

அதற்கமைய இந்தோனேசியா அரசாங்கம் இலங்கையின் சுகாதார அமைச்சு மற்றும் இந்தோனேசியாவிலுள்ள உலக சுகாதார அமைப்பின் பிரதிநிதி அலுவலகத்தின் ஆலோசனையுடன், சுகாதார அதிகாரிகள் மற்றும் இந்தோனேசியாவின் மருந்துத் துறையுடன் இணைந்து பணியாற்றியதாக தூதுவர் டோபிங் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சருக்கு விளக்கமளித்தார்.

மனிதாபிமான உதவிகள் இரண்டு தொகுதிகளாக இலங்கையை சென்றடையும் என்றும், ஜகார்த்தாவிலிருந்து ஸ்ரீலங்கன் எயார்லைன்ஸில் நேற்று வியாழனன்று முதலாவது கப்பல் வந்துசேர்வதற்கான நடவடிக்கைகள்



எடுக்கப்பட்டதாகவும் தூதுவர் குறிப்பிட்டார்.

மேலும், மிகுதித் தொகை 2022 மே 08ஆம் திகதி, ஞாயிற்றுக்கிழமை வந்தடையும். சுகாதார அமைச்சின் வேண்டுகோளைத் தொடர்ந்து இந்தோனேசிய அதிகாரிகளும் மருந்து மற்றும் சுகாதாரப் பாதுகாப்புத் துறையும் பத்து நாட்களில் ஒன்றிணைந்து உதவிகளை விரைவாக அனுப்புவதை உறுதிசெய்யும் வகையில் பொருட்களை நன்கொடையாக வழங்கியதுடன், அதன் நீண்டகால நெருங்கிய நட்பைக் கருத்திற்கொண்டு இலங்கைக்குத் தேவைப்படும் நேரத்தில் ஆதரவளிப்பதில் மகிழ்ச்சியடைந்ததாக தூதுவர் அமைச்சரிடம் தெரிவித்தார்.

இந்தோனேசிய அரசாங்கம் மனிதாபிமான உதவிகளை தாராளமாக வழங்கியமைக்கு இலங்கை அரசாங்கத்தின் ஆழ்ந்த பாராட்டுகளை தூதுவரிடம் தெரிவித்த வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் பீரிஸ், இது இரு நாடுகளுக்கும் இடையிலான நெருங்கிய நட்புறவின் தெளிவான வெளிப்பாடாகும் எனக் குறிப்பிட்டார்.

இந்தோனேசியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான நெருங்கிய உறவுகள் மற்றும் சர்வதேச அரங்கில் கடல் பிரச்சினைகள் மற்றும் செயன்முறைகளில் ஒத்துழைப்பையும், உலக அரங்கில் பிரச்சினைகளை புறநிலையாக தீர்க்க அணிசேரா இயக்கத்தில் நெருக்கமாக பணியாற்றுவதையும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் குறிப்பிட்டார்.

இந்தோனேசியாவின் வெளிநாட்டு அமைச்சர் ரெட்னோ மர்சூடியுடன் கிளாஸ்கோவில் ஐ.நா. காலநிலை மாற்ற மாநாட்டில் சந்தித்ததையும், சமீபத்தில் கட்டாரிலுள்ள தோஹா மன்றத்தில் இருதரப்பு உறவுகள் குறித்து கலந்துரையாடியதையும் வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சர் பீரிஸ் நினைவு கூர்ந்தார்.

இந்தோனேசியாவுக்கும் இலங்கைக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகளின் 70ஆவது ஆண்டு நிறைவை நினைவுகூரும் வகையில், இந்த வருடத்தின் பிற்பகுதியில் வெளிவிவகார பிரதியமைச்சரை வரவேற்பதற்கு எதிர்பார்த்துள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

## 28.04.2022 நாணய மாற்று வீதம்

| நாணயம் | கொள்வனவு வீதம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| அவுஸ்திரேலியன் டொலர் | 132 5012 | 143 6187 |
| கனேடியன் டொலர் | 156 6413 | 167 6018 |
| சீன யுவான் (ரென்மின்பி) | 41 0180 | 43 2872 |
| யூரோ | 254 12 7 | 266 168 |
| ஜப்பான் யென் | 1 5635 | 1 67 1 |
| சிங்கப்பூர் டொலர் | 138 4 8 | 147 24 5 |
| ஸ்ரேலிங் பவுன் | 320 27 4 | 337 5688 |
| சுவிஸ் பிராங் | 243 6854 | 257 3676 |
| ஐ.அ.டொலர் | 231 0562 | 243 885 |

| நாடு | நாணயம் | விற்பனை வீதம் |
|---|---|---|
| பஹ்ரைன் | பஹ்ரைன் தினார் | 8 5 5687 |
| குவைட் | குவைட் தினார் | 0,005 516 |
| ஓமான் | ஓமான் றியால் | 776 80 4 |
| கட்டார் | கட்டார் றியால் | 82 4 53 |
| சவூதி அரேபியா | சவூதி அரேபிய றியால் | 80 03 5 |
| ஐக்கிய அரபு இராச்சியம் | ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம் | 82 587 |

# தைரொயிட் நோயாளர்களுக்கான மருந்து இலங்கையிலேயே தயாரிப்பு



தைரொயிட் நோயினால் பாதிக்கப்பட்டுள்ள நோயாளர்களுக்கான லிவோ தைரொக்சின் (LEVOTHYROXINE) என்றழைக்கப்படும் மருந்து, அரச மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தால் தயாரிக்கப்பட்டு மருத்துவ சேவை வழங்கும் பிரிவுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இதுவரைகாலமும் அரச மருத்துவமனைகளில் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு மருந்து வகைகளே பயன்படுத்தப்பட்டன.

இந்நிலையில், மேலும் நான்கு வாரங்களில் தனியார் பிரிவைச் சேர்ந்த ஒசுசலக்களுக்கு இந்த மருந்துகளை



விநியோகிக்கக்கூடியதாக இருக்குமென மருந்தாக்கல் கூட்டுத்தாபனத்தின் தலைவர் வைத்தியர் உத்பல இந்ரவங்ச தெரிவித்துள்ளார்.

# அரசுக்கு எதிராக புத்தளத்தில் சத்தியாக்கிரகப் போராட்டம்

(ரஸீன் ரஸ்மின்)

ஜனாதிபதியும், அரசாங்கமும் உடனடியாக பதவி விலக வேண்டுமெனக் கோரி புத்தளம், கொழும்பு முகத்திடலில் நேற்று முன்தினம் (27) இரவுமுதல் சுழற்சி முறையிலான சத்தியாக்கிரகப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த 21ஆம் திகதிமுதல் கோட்டா கோ கம கிளையொன்று புத்தளம், கொழும்பு முகத்திடலில் அமைக்கப்பட்டு அங்கு எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

கூடாரங்கள் அமைக்கப்பட்டிருப்பதுடன், இன, மத வேறுபாடுகளின்றி சிலர் அங்கு நிரந்தரமாக தங்கியிருந்தும் இரவு, பகலாக தமது எதிர்ப்புகளையும் தெரிவித்து வருகின்றனர்.

இந்நிலையில், நேற்று முன்தினம் (27) இரவுமுதல் புத்தளம், கொழும்பு முகத்திடலில் அமைக்கப்பட்டுள்ள கோட்டா கோ கமவில் சுழற்சி முறையிலான சத்தியாக்கிரகப் போராட்டமும் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. முன்னாள் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், புத்தளத்தின் மூத்த அரசியல்வாதியுமான டாக்டர் எம்.ஐ.இல்யாஸ் குறித்த சுழற்சி முறையிலான சத்தியாக்கிரகப் போராட்டத்தை ஆரம்பித்துவைத்துள்ளார்.

மேற்படி இந்த சத்தியாக்கிரகப் போராட்டத்திற்கு தமிழ், பௌத்த மற்றும் கிறிஸ்தவ மதத் தலைவர்களும், பொதுமக்களும் தமது ஆதரவை தெரிவித்துள்ளதுடன், அவர்களும் மேற்படி சுழற்சி முறையிலான சத்தியாக்கிரகப் போராட்டத்தில் கலந்துகொள்ளவுள்ளனர்.

இது ஒரு வரலாற்று ரீதியான போராட்டமாகும். இலங்கையில் வாழும் மூவினத்தவர்களையும் ஒன்றிணைத்து அநியாயக்கார ஆட்சியாளர்களுக்கு எதிராக போராட்டங்களை முன்னெடுத்து வருகிறார்கள் என போராட்டத்தில் ஈடுபடும் முன்னாள் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், புத்தளத்தின் மூத்த அரசியல்வாதியுமான டாக்டர் எம்.ஐ.இல்யாஸ் தெரிவித்தார்.

சர்வாதிகார ஆட்சியாளர்களுக்கு எதிராக, ஈரானிய மக்கள் அகிம்சை வழியில் போராடி வெற்றிபெற்றதைபோலவே, இலங்கையிலும் மக்கள் தமது வாழ்வாதாரத்திற்காக எதுவிதமான பேதங்களுமின்றி தொடர்ச்சியாக போராட்டங்களை நடத்திவருவதாகவும் கூறினார்.

# எயிட்ஸ் நோய் பரிசோதனைகளை வீடுகளில் முன்னெடுக்க சந்தர்ப்பம்

## இணையத்தில் முன்பதிவு செய்யவும் அமைச்சு நடவடிக்கை

எயிட்ஸ் நோய் தொடர்பான பரிசோதனைகள் தற்போது நாடுமுழுவதிலும் முன்னெடுக்கப் பட்டுள்ளன.

இந்த பரிசோதனைக்காக இணையத்தளத்தின் மூலம் அதற்கான நேரத்தை ஒதுக்கிக்கொள்ள முடியும் என்று தேசிய பாலியல் நோய் ஒழிப்பு மற்றும் எயிட்ஸ் ஒழிப்பு வேலைத்திட்டம், சுகாதார மேம்பாட்டு பணியகம் பொதுமக்களுக்கு அறிவித்துள்ளது.

உலகில் ஏனைய நாடுகளுடன் ஒப்பிடுகையில், இலங்கையில் எச்.ஐ.வி.யினால் பாதிக்கப்பட்ட நோயாளர்களின் எண்ணிக்கை குறைந்த மட்டத்தில் இருந்தபோதிலும் புதிதாக அடையாளம் காணப்படுவோரின் எண்ணிக்கை படிப்படியாக அதிகரித்து வருவதாகவும் அறிக்கைகள் தெரிவிக்கின்றன. தற்பொழுது இலங்கையில் இந்நோயினால் பாதிக்கப்பட்ட 3,700 பேர் வாழ்கின்றனர். இலங்கையில் கடந்த வருடத்தில் எச்.ஐ.வி. தொற்றுக்குள்ளானோரின் எண்ணிக்கை 410 என பதிவாகியுள்ளது.

அத்தோடு 2019ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் 2020 மற்றும் 2021 வருடங்களில் நோயாளர்களின் எண்ணிக்கை சற்று குறைவடைந்துள்ளமை எடுத்துக்காட்டப் பட்டுள்ளது.

கொவிட் தொற்று காரணமாக விதிக்கப்பட்டிருந்த சுற்றுலாப் பயணிகளுக்கான வரையறையினால் எச்.ஐ.வி. பரிசோதனைகளுக்கு பாதிப்பு ஏற்பட்டிருந்தது.

பரிசோதனையை மேற்கொள்ள விரும்புவோர் www.know4sure.lk என்ற இணையத்தளத்தில் பிரவேசித்து இதற்கான நேரத்தை ஒதுக்கிக்கொள்ள முடியும்.

மேலும், 0112667163 அல்லது 0703633533 என்ற தொலைபேசி இலக்கத்தின் ஊடாக தொடர்புகொண்டும் இது தொடர்பான மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ள முடியும்.

இதற்கு மேலதிகமாக 0716379192 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு எச்.ஐ.வி. நோயை சுயமாக பரிசோதனை செய்யும் உபகரணங்களை வீட்டிற்கு கொண்டுவந்து பரிசோதனை செய்துகொள்ள முடியும்.

# மலேசியாவுக்கான உயர்ஸ்தானிகர் சுமங்கலவின் சான்றிதழ்கள் அந்நாட்டு மன்னரிடம் ஒப்படைப்பு

உயர்ஸ்தானிகர் எயார் சீஃப் மார்ஷல் தாபரே லியனகே சுமங்கல டயஸ் துனுத நற்சான்றிதழ்கள் உள்ளிட்ட ஆவணங்களை மலேசியாவின் மன்னர் யாங் டி-பெர்துவான் அகோங் அல்-சுல்தான் அப்துல்லா ரியாதுதீன் அல்-முஸ்தபா பில்லா ஷா இப்னி அல்மர்ஹும் சுல்தான் ஹாஜி அஹ்மத் ஷா அல்-முஸ்தாயின் பில்லாவிடம் அண்மையில் கையளித்தார்.

இந்நிகழ்வு மலேசியாவின் இஸ்தானா நெகாரா, கோலாலம்பூரில் இடம்பெற்றது..

நற்சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் அணிவகுப்பு வழங்கப்பட்டு, இலங்கையின் தேசிய கீதம் இசைக்கப்பட்டது. அணிவகுப்பைத் தொடர்ந்து நற்சான்றிதழ்களை கையளித்ததன் பின்னர் மன்னரை மரியாதை நிமித்தமாகச் சந்தித்தார்.

புதிய உயர்ஸ்தானிகரின் பணிகள் வெற்றியடைய வாழ்த்திய மன்னர் யாங் டி-பெர்டுவான் அகோங் ஒஎஜ, மலேசியா மற்றும் இலங்கை ஆகிய இருதரப்பு உறவுகளை சோதித்திருந்த காலத்தை அன்புடன் நினைவு கூர்ந்தார். இலங்கையின் கொவிட்-19 நிலைமை மற்றும் நிலைமையை சமாளிக்க எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்தும் மன்னர் கேட்டறிந்தார்.

மலேசியாவுக்கான இலங்கை உயர்ஸ்தானிகர், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் வாழ்த்துகளை மலேசிய மன்னருக்கு தெரிவித்ததுடன், இலங்கையின் தற்போதைய நிலைமை மற்றும் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவின் தலைமையில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து விளக்கினார். வர்த்தக உறவுகளை மேலும் வலுப்படுத்துவதற்கும், இரு நாடுகளுக்கும் உகந்த துறைகளில் ஒத்துழைப்பின் புதிய எல்லைகளைத் திறப்பதற்கும் அவர் ஆர்வம் காட்டினார்.

மேலும் மனித வளத்துறையில் இலங்கைக்கு வழங்கப்பட்டுள்ள வாய்ப்புகளை அதிகரிப்பதற்கு உயர்ஸ்தானிகர் விருப்பம் தெரிவித்தார்.

மலேசியாவுக்கான இலங்கைத் தூதுவராக நியமிக்கப்படுவதற்கு முன்னர், எயார் சீஃப் மார்ஷல் சுமங்கல டயஸ் இலங்கை விமானப்படையின் 17ஆவது தளபதியாக இருந்தார்.

# நாயாறு பகுதியில் வோட்டர் ஜெல் உள்ளிட்ட வெடிபொருட்கள் மீட்பு

நாயாறு கடலில் மறைத்துவைக்கப்பட்டிருந்த வோட்டர் ஜெல் உள்ளிட்ட வெடிபொருட்கள் கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

நாயாறு கடற்பகுதியில் அண்மையில் மேற்கொள்ளப்பட்ட தேடுதல் நடவடிக்கையின் போது, மிதவையின் மூலம் கடற்பரப்பில் பாதுகாப்பாக மறைத்துவைக்கப்பட்டிருந்த 04 வோட்டர் ஜெல் குச்சிகள் உட்பட பல வெடிபொருட்கள் கடற்படையினரால் மீட்கப்பட்டுள்ளன.

கடற்றொழில் சமூகத்தைச் சேர்ந்த மிகக் குறைந்த எண்ணிக்கையிலான மீனவர்களால் மேற்கொள்ளப்படும் சட்டவிரோத மீன்பிடித் தொழிலின் காரணமாக கடல்சார் சூழலுக்கு சேதம் ஏற்படுவதைத் தடுக்கும் வகையில் தீவை சுற்றியுள்ள கரையோரப் பகுதிகளில் கடற்படையினர் பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அதன்படி, கிழக்கு கடற்படை கட்டளைக்கு சொந்தமான இலங்கை கடற்படை கப்பல் கோட்டாபய நிறுவனத்தின் கடற்படையினர் முல்லைத்தீவு நாயாறு கடற்பரப்பில் விசேட தேடுதல் நடவடிக்கையொன்றை மேற்கொண்ட போது ஒரு மிதவையின் ஆதாரத்தில் பாதுகாப்பாக மறைத்து



வைக்கப்பட்டிருந்த 04 வோட்டர் ஜெல் குச்சிகள் (Water Gel), 02 மின்சாரமற்ற டெட்டனேட்டர்கள் மற்றும் 06 அங்குல நீளமுள்ள பாதுகாப்பு உருகியொன்றையும் கைப்பற்றியுள்ளனர்.

சட்டவிரோத மீன்பிடித்தொழிலுக்கு பயன்படுத்துவதற்காக இந்த வெடிபொருட்கள் கடற்பரப்பில் மறைத்துவைக்கப்பட்டிருக்கலாம் என நம்பப்படுகிறது. மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக வெடிபொருட்கள் முல்லைத்தீவு உதவி கடற்றொழில் பரிசோதகர் அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

மேலும், இவ்வாறான சட்டவிரோத மீன்பிடி நடவடிக்கைகளை கட்டுப்படுத்த கடற்படையினர் தொடர்ந்தும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

ரம்புக்கனை துப்பாக்கிச்சூடு சம்பவம்:

# பொலிஸ் மா அதிபருக்கு உத்தரவு கிடைக்கவில்லை

ரம்புக்கனை துப்பாக்கிச்சூடு சம்பவம் தொடர்பில் பொலிஸ் அதிகாரிகளை கைதுசெய்வதற்கான நீதிமன்ற உத்தரவு இதுவரையில் பொலிஸ் மா அதிபருக்கு கிடைக்கவில்லையென பொலிஸ் ஊடகப் பேச்சாளர், சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்துள்ளார்.

உத்தரவு கிடைத்தவுடன் உடனடியாக நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

கடந்த 19ஆம் திகதி ரம்புக்கனை பிரதேசத்தில் இடம்பெற்ற எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தின்போது பொலிஸ் அதிகாரிகளினால் நடத்தப்பட்ட துப்பாக்கிச்சூட்டுச் சம்பவத்தில் சமிந்த லக்ஷான் என்பவர் உயிரிழந்திருந்தார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக வழக்கு நேற்று முன்தினம் (27) கேகாலை நீதவான் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, இந்தக் கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய சகல பொலிஸ் அதிகாரிகளையும் கைதுசெய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு நீதவான் வாசனா நவரத்தன உத்தரவிட்டிருந்தார்.

# பேலியகொடை மீன் விற்பனை நிலையத்தின் நாளாந்த செயற்பாடுகளுக்கு இடையூறு



நாடு முழுவதும் நேற்று (28) அரச அதிகாரிகளினால் முன்னெடுக்கப்பட்ட ஒருநாள் வேலைநிறுத்தப் போராட்டத்தின் காரணமாக பேலியகொடை மீன் சந்தையின் நடவடிக்கைகளுக்கு கடும் இடையூறு ஏற்பட்டிருந்ததாக பேலியகொடை மீன் சந்தையின் வியாபாரிகள் சங்கத்தின் செயலாளர் ஜயந்த குரே தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது,

வழமையாக, பேலியகொடை மீன் சந்தைக்கு நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் நாளாந்தம் காலையிலிருந்து பெருமளவு வியாபாரிகள் வருகை தருவார்கள். ஆனால், நேற்று (28) அவர்களின் வருகை வீதத்தில் பெரும் வீழ்ச்சியை அவதானிக்கக் கூடியதாக இருந்தது.

மீன்களை எடுத்துவரும் குறுகிய லொறிகள் காலையில் வருகை தந்திருந்தன. மீன் குறைவான நேரத்தில் அவற்றை விற்பனை செய்தோம்.

நாட்டின் பல பகுதிகளிலிருந்தும் பேலியகொடை மீன் விற்பனை நிலையத்துக்கு மீன்களை எடுத்துச் செல்ல வேண்டாமென எனக்கு அறிவிக்கவில்லை என்று சுட்டிக்காட்டியுள்ளார்.

# அரசுக்கு எதிரான ஆர்ப்பாட்டங்களால்
# மலையகப் பகுதிகள் ஸ்தம்பிதம்

(க.கிஷாந்தன், செ.தி.பெருமாள், இரா.யோகேசன், மனுர சுதத் செல்லஹேவா, பி.கேதீஷ், நடராஜா மலர்வேந்தன், டி.அசோக்குமார், சிதார இராஜ், அருண் யுகேஸ், செ.திவாகரன், சிவா ஸ்ரீதரராவ், கம்பளை யோகா, ஜே.எம். ஹாபஸ், கண்டி அ.இராமன்)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான அரசு உடனடியாக பதவி விலக வேண்டும் என வலியுறுத்தி நாடு தழுவிய ரீதியில் நேற்று(28) வியாழக்கிழமை எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களும் ஹர்த்தாலும் அனுஷ்டிக்கப்பட்டது. இதற்கு மலையகத்திலிருந்து அரச, அரசசார்பற்ற தனியார்த்துறை, பெருந்தோட்டத்துறை, வெகுஜன அமைப்புகள் உள்ளிட்ட பல அமைப்புகளும் ஆதரவு வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

குறிப்பாக, பெருந்தோட்டத் தொழிலாளர்கள் நேற்று வேலைக்கு செல்லவில்லை. தமது வீடுகளுக்கு முன்னால் கறுப்பு கொடிகளை பறக்கவிட்டு தமது எதிர்ப்பை வெளிப்படுத்தியிருந்தனர்.

மலையக பெருந்தோட்டப் பகுதிகளை அண்டியுள்ள நகரங்களில் எதிர்ப்பு ஊர்வலமும் நேற்று நடைபெற்றிருந்தது. வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டிருந்த அதேவேளை, கறுப்புக் கொடிகளும் பறக்கவிடப்பட்டிருந்தன. பாடசாலைகள் முற்றாக ஸ்தம்பித்திருந்தன. இ.போ.ச. பஸ்கள் சேவையில் ஈடுபட்டிருந்த அதேவேளை, அவற்றுக்கு பொலிஸாரின் பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தமையும் குறிப்பிடத்தக்கது.




மல்லியப்புசந்தியில்...



பதுளையில்...



பொகவந்தலாவையில்...





மலையக
செய்திகள்
thamilanmalayagam@gmail.com



தெரணியகலையில்...






நுவரெலியாவில்...





ஹட்டனில்...



கலஹாவில்...








கினிகத்தேனையில்...



பேராதனையில்...




பசறையில்...



மஸ்கெலியாவில்...




நானுஓயா லேங்டல் தோட்டத்தில்...





வட்டவளையில்...



சாமிமலையில்...



இரத்தினபுரியில்...








தலவாக்கலையில்...



# தொழிற்சங்க பணிப்புறக்கணிப்பால் மக்களின் அன்றாட செயற்பாடுகள் பாதிப்பு




(யாழ். நிருபர்)

ஜனாதிபதி மற்றும் அரசாங்கத்தை பதவி விலகக் கோரி பல தொழிற்சங்கங்கள் பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டுள்ளமையால் யாழ்ப்பாண நகரில் பொதுமக்களின் அன்றாட செயற்பாடுகள் பாதிக்கப்பட்டுள்ளன.

ஜனாதிபதி மற்றும் தற்போதைய அரசாங்கத்தை பதவி விலக வலியுறுத்தி நேற்று (28) வியாழக்கிழமை நாடளாவிய ரீதியில் பல தொழிற்சங்கங்கள் பணிப்புறக்கணிப்புப் போராட்டத்தை அறிவித்து போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றன.

அதனால் யாழ்ப்பாண குடாநாட்டின் இயல்பு நிலை முற்றாக செயலிழந்து வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டு தனியார் மற்றும் அரச போக்குவரத்து சேவைகள் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் இடம் பெறுகின்றன.

பாடசாலைகள் மற்றும் வங்கி சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளதோடு, புகையிரத மற்றும் தபால் சேவைகள் முற்றாக செயலிழந்துள்ளன.

அத்தோடு யாழ்ப்பாண நகர வீதிகளில் பொது மக்களின் நடமாட்டம் குறைவாக காணப்படுவதோடு யாழ்ப்பாண நகரில் வர்த்தக நிலையங்களும் மூடப்பட்டுள்ளன.

## யாழ். குருநகரைச் சேர்ந்த இருவர் தமிழகத்தில் தஞ்சம்




(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணத்தை சேர்ந்த இரண்டு இளைஞர்கள் கடல் வழியாக இந்தியா சென்று தஞ்சமடைந்துள்ளனர்.

யாழ்ப்பாணம் குருநகர் கடற்கரை வீதியைச் சேர்ந்தவர்களான ஜெயசீலன் சீலன் மற்றும் வினோத் அருள்ராஜ் ஆகிய இரு இளைஞர்களே தஞ்சமடைந்துள்ளனர்.

குறித்த இருவரும் கடந்த புதன்கிழமை குருநகர்ப் பகுதியிலிருந்து படகொன்றின் மூலம் சென்று, நேற்று முன்தினம் அதிகாலை தனுஷ்கோடிக்கு அருகில் கரையிறங்கியவேளை தமிழக கடலோரப்பாதுகாப்புப் பொலிஸாரினால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்களிடம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிகள் காரணமாக யாழ்ப்பாணம், மன்னார் கடற்பரப்புகள் ஊடாக தமிழகம் சென்று தஞ்சமடைவோர் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக கடந்த மார்ச் 22ஆம் திகதியிலிருந்து இன்றுவரை இலங்கையைச் சேர்ந்தவர்கள் 77 பேர் அகதிகளாக தமிழகத்திற்கு சென்றுள்ளனர்.

## தொழிற்சங்க நடவடிக்கை காரணமாக மன்னாரில் இயல்புநிலை பாதிப்பு




(மன்னார் நகர் நிருபர்)

நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற தொழிற்சங்க நடவடிக்கைக்கு ஆதரவு வழங்கும் விதமாக மன்னாரில் நேற்று வியாழக்கிழமை (28)அரச வங்கிகள், தபாலகம் உட்பட பல அலுவலகங்கள் மூடப்பட்டு தொழிற்சங்க நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

பாடசாலைகள் பெரும்பாலானவை நடைபெறவில்லை என்பதுடன், சில பாடசாலைகளுக்கு மாணவர்களின் வரவும் குறைந்து காணப்பட்டதையும் அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

அதேநேரம், பஸ் சேவைகள் வழமைபோல் இடம்பெற்றன. வர்த்தக நிலையங்களும் வழமைபோல் இயங்கிவருவதை அவதானிக்கக்கூடியதாக இருந்தது.

தொழிற்சங்க நடவடிக்கை காரணமாக அரச வங்கிகள் ஊடாகவும் தபால் அலுவலகங்கள் ஊடாகவும் முன்னெடுக்கப்பட்டு வரும் சேவைகள் இடைநிறுத்தப்பட்டமையினால் மக்கள் பெரும் பாதிப்புக்குள்ளாகியுள்ளனர்.

வடக்கு செய்திகள்
thamilannorth@gmail.com





தொழிற்சங்கங்களின் போராட்டத்திற்கு ஆதரவளித்து நேற்று (28) சாவகச்சேரி வர்த்தகர்கள், வியாபாரிகள் கதவடைப்பினை மேற்கொண்டிருந்தனர். (சாவகச்சேரி நிருபர்)

## யாழ். பல்கலை ஆசிரியர் - ஊழியர் சங்கங்கள் போராட்டத்தில் குதிப்பு!




யாழ்ப்பாண பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் மற்றும் ஊழியர் சங்கம் என்பன நேற்று வியாழக்கிழமை போராட்டத்தில் ஈடுபட்டன.

ஜனாதிபதியையும், அரசாங்கத்தையும் பதவி விலகக்கோரி நாடளாவிய ரீதியில் தொழிற்சங்கங்கள் நேற்று பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளன.

குறித்த போராட்டத்திற்கு வலு சேர்க்கும் வகையில் யாழ்ப்பாண பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் மற்றும் ஊழியர் சங்கம் என்பன யாழ். பல்கலைக்கழக முன்றலில் போராட்டத்தில் ஈடுபட்டன.




## இலங்கை வங்கி ஊழியர்கள் போராட்டம்




(யாழ். நிருபர்)

இலங்கை வங்கி ஊழியர் சங்கத்தினரின் ஏற்பாட்டில், யாழ்ப்பாண மத்திய பஸ் நிலையம் முன்பாக நேற்று வியாழக்கிழமை போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

ஜனாதிபதி மற்றும் அரசாங்கம் பதவி விலக வேண்டும் எனக் கோரி நாடளாவிய ரீதியில் நேற்று போராட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ள நிலையில், அதற்கு வலுசேர்க்கும் வகையில் இலங்கை வங்கி ஊழியர் சங்கம் குறித்த போராட்டத்தினை முன்னெடுத்தது.

## யாழ். மண்ணுக்கும் பாடசாலைக்கும் தேசிய ரீதியில் பெருமை சேர்த்த வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி மாணவர்கள்



(யாழ். நிருபர்)

கொழும்பு வித்தியா விருத்திச் சங்கத்தின் எழுபதாவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நிகழ்நிலையில் நடத்தப்பட்ட விவாதப் போட்டியில் கலந்துகொண்டு, யாழ். வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரி மாவட்ட ரீதியிலும் மாகாண ரீதியிலும் முதலிடத்தை தட்டிச்சென்றது.

பின்னர் அதன் இறுதிப் போட்டியானது கடந்த 23ஆம் திகதி கொழும்பு, லோறன்ஸ் வீதியில் அமைந்துள்ள சரஸ்வதி மண்டபத்தில் நடைபெற்றது.

இந்த இறுதிப் போட்டியில் கலந்துகொண்டு கொழும்பு பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி தேசிய ரீதியில் முதலாம் இடத்தைப் பெற்றுக்கொண்டதுடன் யாழ். வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரி தேசிய ரீதியில் இரண்டாம் இடத்தைப் பெற்றுக்கொண்டது.

சி.கேசவன், ர.துலக்சன், இ.அஸ்வின், ந.பிருதிக்சா ஆகிய மாணவர்களே வட்டுக்கோட்டை இந்துக்கல்லூரி சார்பில் கலந்துகொண்டு யாழ். மண்ணிற்கும் பாடசாலைக்கும் பெருமை சேர்த்துள்ளனர். வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பணப்பரிசு, சான்றிதழ்கள், நூற்பரிசு மற்றும் வெற்றிக்கேடயம் என்பன வழங்கி கௌரவிக்கப்பட்டது.

## இடைக்காடு கிராமம் பற்றிய நூல் வெளியீடு

(யாழ். நிருபர்)

இடைக்காடு இணையத்தின் அனுசரணையில் இடைக்காடர் ஈஸ்வரனால் எழுதப்பெற்ற 'இடைக்காடு எம் தாயகம் - வரலாறும் வளர்ச்சியும்' என்ற நூலின் வெளியீட்டு நிகழ்வு மே 1ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு இடைக்காடு மகாவித்தியாலய பொன்விழா மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

ஓய்வுநிலை வலயக்கல்விப் பணிப்பாளர் க. முருகவேல் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில், வரவேற்புரையை ஓய்வுநிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் நா.சுவாமிநாதனும், வெளியீட்டுரையை ஓய்வுநிலை ஆசிரிய ஆலோசகர் செ.விஸ்வலிங்கமும், நூல் நயப்புரையை கோப்பாய் ஆசிரிய கலாசாலை பிரதி முதல்வர் செந்தமிழ்ச்சொல்லருவி சந்திரமௌலீசன் லலீசனும் வழங்குவர்.


திகதி 27.04.2022 புதன்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 4745
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 9,997,630.00
ஆங்கில எழுத்து R வெற்றி இலக்கங்கள் 5 7 5 4 6 9
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 13,787,910.00

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 1239
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 2,100,820.00
வெற்றி இலக்கினம் மேஷம் வெற்றி இலக்கங்கள் 7 2 2 6 4 6
அடுத்த சீட்டிழுப்பின சுப்பர் பரிசு ரூ. 11,105,832.40

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 775
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,231,900.00
Z 26 50 63 73
வெற்றி இலக்கினம் வெற்றி இலக்கங்கள்
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 109,042,825.60

ராசீ சுப பலன் Handahana
சீட்டிழுப்பு இலக்கம் : 0054
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 4,683,520.00
இலக்கினம் ரிஷபம் வெற்றி இலக்கங்கள் 09 10 13 52
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 3,018,524.20

கோடி 24 + Mega POWER மெகா பவர்
சீட்டிழுப்பு இலக்கம் 1093
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 3,846,520.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 249,361,490.00
N 11 03 35 56 79
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

தேசிய லொத்தர் சபை National Lotteries Board
தொலைபேசி: 011-4607000, 011 - 4607001 - 2 பெக்ஸ்: 011-4669475
Email : info@nlb.lk Web : www.nlb.lk


## மன்னார் செயலகத்தில் சர்வமதத் தலைவர்களை ஒன்றிணைத்து இடம்பெற்ற இப்தார் நிகழ்வு




(மன்னார் நகர் நிருபர்)

வடமாகாண கல்விப் பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை, இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் திணைக்களம் மற்றும் மன்னார் மாவட்ட செயலகத்துடன் ஒன்றிணைந்து ஏற்பாடுசெய்த இப்தார் நிகழ்வு நேற்று முன்தினம் (27) மாலை 5 மணியளவில் மன்னார் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர் ஆர்.வரதீஸ்வரன் தலைமையில் இடம்பெற்ற குறித்த நோன்பு திறக்கும் நிகழ்வில் சர்வமதத் தலைவர்கள், வடமாகாணத்தின் பிரதம செயலாளர், மன்னார் மாவட்ட செயலாளர், வடமாகாண பண்பாட்டலுவல்கள் பணிப்பாளர், பொலிஸ் பொறுப்பதிகாரி, பிரதேச செயலாளர்கள், திட்டமிடல் பணிப்பாளர், பிரதம உள்ளகக் கணக்காய்வாளர், பதவிநிலை உத்தியோகத்தர்கள், திணைக்களத் தலைவர்கள், மதத் தலைவர்கள், மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள், மாணவர்கள், பொதுமக்கள் என பல்வேறு தரப்பினர் கலந்துகொண்டனர்.

இதன்போது சர்வமதத் தலைவர்களின் ஆசிச் செய்தி வழங்கப்பட்டது.

மேலும் நோன்பு திறக்கும் நிகழ்வு இடம்பெற்றதோடு, தெரிவுசெய்யப்பட்ட மாணவர்களுக்கு பாடசாலை கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

# கிழக்கில் பாடசாலைகள், வங்கிகள், அரச அலுவலகங்களுக்கு பூட்டு; அரசுக்கு எதிராக வீதியை மறித்து பல்வேறு இடங்களில் ஆர்ப்பாட்டம்





























(கிண்ணியா, காரைதீவு, அக்கரைப்பற்று, கல்லடி, சீனக்குடா, கல்முனை, மாளிகைக்காடு, திருகோணமலை நிருபர்கள்)

இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி நிலைமைகளிலிருந்து விடுபட உடனடித் தீர்வு காணுமாறு வலியுறுத்தி அரச சேவையாளர்கள் நேற்று நாடுதழுவிய ரீதியில் ஒருநாள் சுகயீன விடுமுறைப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

நூற்றுக்கணக்கான தொழிற்சங்கங்கள் ஒன்றிணைந்து ஏற்பாடுசெய்த இந்த சுகயீன விடுமுறைப் போராட்டத்திற்கு கிழக்கு மாகாணத்தின் இலங்கை அரசாங்க பொது சேவைகள் சங்கம் முழுமையான ஆதரவை வழங்கி வருகின்றது.

இதேநேரம், தேசிய ரீதியில் நேற்று முன்னெடுக்கப்படும் தொழிற்சங்கங்களின் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் கிழக்கு மாகாணத்தில் திருகோணமலை, அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங் களில் பல்வேறு இடங்களில் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களும் பணிப்பகிஷ்கரிப்பும் இடம்பெற்று வருகின்றன. இதற்கமைவாக அக்கரைப்பற்று, நிந்தவூர், தம்பலகாமம், கிண்ணியா பிரதேசங்களில் அரச வங்கிகள், அரச திணைக்களங்கள், தபால் நிலையங்கள், பாடசாலைகள் மற்றும் வர்த்தக நிலையங்கள் மூடப்பட்டுள்ளன.

பாடசாலைகளுக்கு ஆசிரியர்களும் மாணவர்களும் சமுகமளிக்காத நிலையில் கல்வி நடவடிக்கைகள் யாவும் ஸ்தம்பிதமடைந்துள்ளன. அத்தோடு அரச திணைக்களங்கள் மற்றும் வங்கிகள் யாவும் மூடப்பட்டுள்ளமையால் மக்களின் அன்றாட சேவைகளும் தடைப்பட்டுள்ளன.

தபால் நிலையங்களும் மூடப்பட்டுள்ள நிலையில், தபால் சேவைகள் யாவும் இடை நிறுத்தப்பட்டுள்ளன. வைத்தியசாலை ஊழியர்களும் ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டிருந்தனர்.

ஆயினும் அக்கரைப்பற்று மத்திய பஸ் போக்குவரத்து நிலையத்திலிருந்து போக்குவரத்து சேவை இடம்பெறுவதுடன், போக்குவரத்து நடவடிக்கையில் தனியார் மற்றும் அரச பஸ்கள் ஈடுபட்டுவருவதையும் அவதானிக்க முடிந்தது.

இதேவேளை, அரசாங்கத்துக்கு எதிரான ஆர்ப்பாட்டங்கள் மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறை மாவட்டங்களில் இடம்பெற்றன. தம்பலகாமத்தில் நேற்று காலை 9.00 மணிக்கு இவ்வார்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது. இவ்வார்ப்பாட்டத்தை தம்பலகாமம் சிவில் சமூகம் ஏற்பாடு செய்திருந்தது. இதில் தமிழ், சிங்கள, முஸ்லிம் என 500இற்கும் மேற்பட்டோர் கலந்துகொண்டனர்.

இவ்வார்ப்பாட்டம் தம்பலகாமம் நான்கு வாயில் பிள்ளையார் கோயிலிலிருந்து ஆரம்பித்து நடைபவனியாகச் சென்று கண்டி - திருகோணமலை பிரதான வீதியிலுள்ள சந்தியில் இடம்பெற்றது. கண்டி - திருகோணமலை பிரதான வீதியை மறித்து ஆர்ப்பாட்டக்காரர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டதனால், போக்குவரத்து சில மணிநேரம் தடைப்பட்டிருந்தது.

கண்டி - திருகோணமலை மற்றும் கொழும்பு - கிண்ணியா வீதிகளின் ஊடான போக்குவரத்து தடைப்பட்டிருந்தது. பின்னர் அங்கு வந்த பொலிஸார் போக்குவரத்தை சீர்செய்தனர்.

தம்பலகாமம் நான்கு வாயில் கோயில் சந்தியிலிருந்து ஆரம்பித்த இவ்வார்ப்பாட்டம் பாலம் போட்டாறுச் சந்தியில் நிறைவுற்றது. ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் "கோட்டா கோ ஹோம்" " பசில் கபுட்டா கா கா" முதலான கோஷங்களை எழுப்பினர்.

"விவசாயிகள் வயிற்றில் அடிக்காதே", "உன்னை ஆதரித்த நாமே உன்னை எதிர்க்கிறோம்" முதலான வாசகங்கள் எழுதிய பதாகைகளையும் ஏந்தி இருந்ததுடன், மாற்றுத் திறனாளிகளும் இதில் இணைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

கோட்டா வேண்டாம் நாட்டை விட்டு அமெரிக்காவுக்கு ஓடு, இந்த கோட்டா, இந்த மஹிந்த வேண்டாம். இந்தக் குடும்பம் வேண்டாம். இவர்களால் பட்ட கஷ்டம் போதும், எங்களால் வாழ முடியவில்லை. வாழ்வதற்கு வழி கேட்டு வீதியில் இறங்கியுள்ளோம் என ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மக்கள் தெரிவித்தனர்.

மேலும், இலங்கை ஆசிரியர் சங்கத்தின் அறிவித்தலுக்கமைவாக ஆசிரியர்கள் அதிபர்கள் நேற்று (28) தொழிற்சங்க வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். ஆசிரியர்கள், அதிபர்கள் சுகயீன விடுமுறைப் போராட்டதில் ஈடுபட்டதனால் பாடசாலைகள் யாவும் மூடப்பட்டிருந்தன. ஆசிரியர்கள், அதிபர்கள், மாணவர்கள் பாடசாலைக்கு சமுகமளிக்கவில்லை. பாடசாலை வாயிற்கதவுகள் மூடப்பட்டிருந்தன. வகுப்பறைகள் வெறிச்சோடிப்போய்க் கிடந்தன.

# சூரிய சக்தி மின்னுற்பத்திக்கான இரு ஒப்பந்தங்கள் கிழக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தில் கைச்சாத்து

## 120 மில்லியன் அமெரிக்க டொலர் முதலீடு





(திருகோணமலை, கிண்ணியா நிருபர்கள்)

தற்போது நாடு முகங்கொடுத்துள்ள பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் மின் உற்பத்தி நெருக்கடி முக்கியமான ஒரு விடயமாக காணப்படுகின்றது. கிழக்கு மாகாண சபைக்கு உட்பட்ட அலுவலகங்களில் சூரிய சக்தி மூலம் மின் உற்பத்திசெய்து தேசிய மின்சக்தியில் இணைத்துக்கொள்வதற்கான இரண்டு ஒப்பந்தங்கள் கைச்சாத்திடும் நிகழ்வு நேற்று (28) திருகோணமலையில் அமைந்துள்ள கிழக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தில் கிழக்கு மாகாண ஆளுநர் அனுராதா யஹம்பத் தலைமையில் நடைபெற்றது.

கிழக்கு மாகாண பிரதம செயலாளர் துசித பி வணிகசிங்க அதேபோன்று kapital crop international pvt ltd, orb touch cc pvt ltd ஆகிய நிறுவனங்களின் பிரதிநிதிகள் இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர்.

தேசிய மின்சக்திக்கு 100 மெகாவாட் மின்சக்தியை இதன்மூலம் இணைத்து கொள்ளக்கூடியதாக இருக்கும். அத்துடன் 120 மில்லியன் அமெரிக்க டொலர் இதற்காக முதலீடு செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. இதன்மூலம் பெறப்படுகின்ற வருமானத்தில் 20 வீதமான வருமானத்தை கிழக்கு மாகாண சபைக்கு பெற்றுக்கொள்ளக் கூடியதாக அமையும். கிழக்கு மாகாணத்தின் அம்பாறை, திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய மாவட்டங்களிலுள்ள கிழக்கு மாகாண சபைக்குரிய நிறுவனங்கள் இது தொடர்பில் கருத்திற்கொள்ளப்பட்டு கட்டம் கட்டமாக இந்த செயற்பாடுகள் முன்னெடுக்கப்படவுள்ளதாக இதன்போது கிழக்கு மாகாண ஆளுநர் தெரிவித்தார்.

நாடு தற்பொழுதுள்ள பொருளாதார நெருக்கடிக்கு மத்தியில் மின் உற்பத்திசெய்வதற்காக ளிபொருளை கொள்வனவு செய்வதற்கு பல மில்லியன் டொலர்களை வெளிநாடுகளுக்கு செலுத்த வேண்டியியுள்ளது. சூரிய சக்தியை பயன்படுத்தி மின் உற்பத்தி செய்வதனாது சூழல் நேயமிக்க ஒரு செயற்பாடாக அமையும். அத்துடன், புதிய தொழில் வாய்ப்புகளும் இதன் மூலம் ஏற்படும். பாடசாலைகள், வைத்தியசாலைகளும் இதற்காக கருத்திற்கொள்ளப்படும். இவ்வேலைத்திட்டம் மூலம் வெளிநாடுகளுக்கு நிலங்கள் ஒருபோதும் விற்பனை செய்யப்படமாட்டாது. இலங்கை நிறுவனங்களே இதனை நடைமுறைப்படுத்தும். நாட்டுக்கு அவசியமான முதலீட்டு வாய்ப்புக்களை ஏற்படுத்துவதன் மூலம் நாடு தற்போது எதிர்நோக்கியுள்ள பொருளாதார நெருக்கடியிலிருந்து தணிய முடியும் என தாம் நம்மபுவதாக ஆளுநர் இதன்போது மேலும் தெரிவித்தார்.

கிழக்கு
செய்திகள்
eastthamilan@gmail.com

# மாநகர சபை உறுப்பினராக பதவியேற்ற ஹமீட்டுக்கு தாய்க்கழகம் கௌரவமளிப்பு



(மாளிகைக்காடு நிருபர்)

மருதமுனை மருதம் விளையாட்டுக்கழக சிரேஷ்ட உதைபந்தாட்ட வீரரும் அக்கழகத்தின் நிர்வாக சபை உறுப்பினருமான அப்துல் சமட் ஹமீட் கல்முனை மாநகர சபைக்கு தேசிய காங்கிரஸின் சார்பில் உறுப்பினராக நியமிக்கப்பட்டமையை வரவேற்று பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வு நேற்று முன்தினம் மாலை மருதமுனையில் இடம்பெற்றது.

தேசிய காங்கிரஸ் கட்சியின் மருதமுனை இளைஞர் அமைப்பாளராகவும், அல்-மீஷான் பௌண்டேஷன் ஸ்ரீலங்காவின் மருதமுனை பிரதேச பிரதம இணைப்பாளராகவும் கடந்த பல வருடங்களாக சேவையாற்றிவரும் அப்துல் சமட் ஹமீட் சிறந்த சமூகசேவகராக மக்களினால் அறியப்பட்டவர். அதனை முன்னிட்டு அப்துல் சமட் ஹமீடை பாராட்டி கௌரவிக்கும் முகமாக மருதமுனை மருதம் விளையாட்டுக் கழகத்தினர் பொன்னாடை போர்த்தி நினைவுச்சின்னம் வழங்கி இதன்போது கௌரவித்தனர்.

மருதமுனை மருதம் விளையாட்டுக்கழகத் தலைவரின் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் மருதம் விளையாட்டுக் கழக செயலாளர், பொருளாளர் அடங்கிய நிர்வாகிகள், வீரர்கள், கிராமசேவையாளர், பிரதேச முக்கியஸ்தர்கள், கழக ஆலோசகர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

நிகழ்வின் இறுதியில் இப்தார் வைபவமும் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# மாணவர்களை இலக்குவைத்து போதைப்பொருள் விநியோகம்

## கல்முனையில் பொலிஸார் ரோந்து நடவடிக்கை

(நிந்தவூர் நிருபர்)

கல்முனை பிரதேசத்தில் மாணவர்களை இலக்கு வைத்து நடத்தப்படும் போதைப்பொருள் விற்பனையை முற்றாக இல்லாதொழிக்கும் வகையில் விசேட ரோந்து நடவடிக்கைகளில் சாய்ந்தமருது, கல்முனை பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர்.

கல்முனை மாநகர சபை எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் கேரள கஞ்சா, ஹெரோயின் மற்றும் மாவா போதைப்பொருட்களின் விற்பனை அதிகரித்துள்ளதாக பொலிஸாருக்கு இரகசிய தகவல் கிடைத்துள்ளதைத் தொடர்ந்தே இந்தத் தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கிராமங்களிலுள்ள பொது அமைப்புகள், சிவில் அமைப்புகள், மத ஸ்தாபனங்கள், போன்றவற்றினூடாக பொதுமக்கள் மத்தியிலும் போதைப்பொருள் சம்பந்தமான விழிப்பூட்டும் நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

பொலிஸார் கடந்த மாதம் தொடக்கம் போதைப்பொருள் பாவனையை கல்முனை பிரதேசத்திலிருந்து முற்றாக ஒழிக்கும் நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர்.

பொலிஸார் சிவில் உடையிலும் ரோந்து நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர். அத்துடன், பாடசாலைகளுக்கு அருகிலுள்ள கடைகள் மற்றும் நடமாடும் உணவு விற்பனை வியாபாரிகளும் பொலிஸாரால் கண்காணிக்கப்பட்டு வருகின்றனர்.

# 'ஒரு மருத்துவரின் மருத்துவமனை நாட்கள்' மட்டக்களப்பில் கவிதை நூல் வெளியீடு

(பாண்டிருப்பு நிருபர்)

மட்டக்களப்பு தமிழ்ச்சங்கத்தின் ஏற்பாட்டில் வைத்திய கலாநிதி இரா. முரளீஸ்வரனின் "ஒரு மருத்துவரின் மருத்துவமனை நாட்கள்" கவிதை நூல் வெளியீடு நாளை (30) காலை 9.30 மணிக்கு மட்டக்களப்பு பிள்ளையாரடி தமிழ்ச்சங்க கட்டடத்தில் இடம்பெறவுள்ளது.

மட்டக்களப்பு தமிழ்ச்சங்கத் தலைவர் சைவப்புரவலர் வி.ரஞ்சிதமூர்த்தி தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்விற்கு, முன்னிலையாக கிழக்குப் பல்கலைக்கழக முன்னால் மொழித்துறைத் தலைவர் பேராசிரியர் செ.யோகராசா, முதன்மை அதிதிகளாக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் க.கருணாகரன், கிழக்குப் பல்கலைக்கழக வேந்தர் வைத்திய கலாநிதி வே.விவேகானந்தராஜா ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

வைத்திய கலாநிதி இரா. முரளீஸ்வரன் ஒரு சிறந்த மருத்துவ நிருவாகி மட்டுமல்லாமல் ஓர் உன்னத இலக்கியப் படைப்பாளியுமாவார். 1976இல் யாழ்ப்பாணம் நெல்லியடியில் பிறந்து 1985ஆம் ஆண்டுகளின் பின்னர் மட்டக்களப்பில் வாழ்ந்துவரும் இவர், தனது கல்வியை மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரியிலும், மருத்துவ பட்டப்படிப்பை யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்திலும் மருத்துவ நிர்வாக முதுமாணியை கொழும்பு பல்கலைக்கழகத்திலும் பெற்றுள்ளார்.

மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் மருத்துவராக 2005ஆம் ஆண்டிலிருந்து கடமையை தொடங்கி 2013ஆம் ஆண்டு கல்முனை ஆதார வைத்தியசாலை வைத்திய அத்தியட்சகராகி தற்போதுவரை அங்கு தொடர்ந்து பணிபுரிகின்றார். மருத்துவ அனுபவங்களும் கவிதை அனுபவமும் இணைந்த மருத்துவமனை நாட்களைப் பற்றிய கவிதைகள் சேர்ந்த கவிதைத் தொகுப்பாக இந்நூல் வெளியிடப்படவுள்ளது.

மேலும் இந்நிகழ்வின் சிறப்பு அதிதிகளாக மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை பணிப்பாளர் வைத்திய கலாநிதி க.கலாரஞ்சனி, மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி கு.சுகுணன் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். இந்நூலின் முதல்பிரதியினை மட்டக்களப்பு தமிழ்ச்சங்க பொருளாளர் தேசபந்து மு.செல்வராசா பெற்றுக்கொள்ளவுள்ளார்.

கதிரவன் த.இன்பராசாவின் ஒருங்கிணைப்பில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் உள்நாட்டு இறைவரித் திணைக்கள சிரேஷ்ட ஆணையாளர் சட்டத்தரணி மு.கணேசராசாவினால் வரவேற்புரையும், கலைக்கோகிலம் நாட்டியப் பள்ளியினால் வரவேற்பு நடனமும் இடம்பெறவுள்ளன.

மேலும் தலைமையுரை, நூலாசிரியர் அறிமுகவுரையைத் தொடர்ந்து நூல் வெளியீடு இடம்பெறவுள்ளது.

# அம்பாறையில் சிறுபோக உழவுவேலைகள் ஆரம்பம்; எரிபொருள் தட்டுப்பாட்டால் இயந்திரக்கூலி அதிகரிப்பு






(அம்பாறை நிருபர்)

நாட்டில் நிலவும் எரிபொருள் நெருக்கடிக்கு மத்தியில் அம்பாறை மாவட்டத்தில் சிறுபோக நெற்செய்கைக்கான உழவுவேலைகள் ஆம்பமாகியுள்ளதுடன், அதற்கான செலவுகளும் பாரியளவில் அதிகரித்துள்ளதாக விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் அம்பாறை மாவட்டத்தின் நிந்தவூர், சம்மாந்துறை, கல்முனை, நாவிதன்வெளி, நற்பிட்டிமுனை, சேனைக்குடியிருப்பு, சொறிக்கல்முனை, சவளக்கடை, மத்தியமுகாம் ஆகிய பிரதேசங்களிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் அரசாங்க அதிபரின் ஆலோசனைக்கமைவாக உழவு வேலைக்கென பிரத்தியேக வரிசையில் வைத்து மட்டுப்படுத்தப்பட்ட அளவில் டீசல் நிரப்பப்படுகின்றது. அத்துடன், உழவு வேலைகளுக்கான கூலிகளும் பரவலாக அதிகரித்துள்ளன.

ஒரு ஏக்கர் உழுவதற்கு உழவு இயந்திரத்திற்கான கூலி 7,000 ரூபாவிலிருந்து 13,000 ரூபாவாக அதிகரித்துள்ளது. ஒரு லீற்றர் டீசல் 340 ருபாவாக அதிகரித்துள்ளமையே இதற்குக் காரணம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. பல உழவு இயந்திர உரிமையாளர்கள் டீசல் பிரச்சினையால் உழமுடியாது என்கிறார்கள். அதனால் இன்னும் உழ முடியாது பல விவசாயிகள் திண்டாட்டத்திலுள்ளனர்.

மேலும் விதைப்பதற்கான கூலி 1,500 ரூபாவிலிருந்து 2,000 ருபாவாக அதிகரித்துள்ள அதேவேளை, வரம்பு கட்டுவதற்கான கூலி 2,000 ரூபாவிலிருந்து 2,500 ரூபாவாக அதிகரித்துள்ளது. ஒரு புசல் விதைநெல் 1,000 ரூபாவால் கூடியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, கடந்த தடவையைப்போல இரசாயனப் பசளை இம்முறையும் கிடைக்கவில்லை என்ற ஆதங்கத்துடன் விவசாயிகள் விதைப்பை ஆரம்பித்துள்ளனர். எனினும், கடந்த தடவை பசளை மாபியாக்கள் கறுப்பு சந்தையினுடாக ஒரு மூடை யூரியாவை விவசாயிகளுக்கு 35 ஆயிரம் முதல் 44 ஆயிரம் ரூபாவரை விற்பனை செய்திருந்தனர்.

அதேவேளை, குறித்த யூரியா இட்டு நெற்செய்கையில் ஈடுபட்டவர்களின் விளைச்சல் அதிகமாகவிருந்தது. கூடவே நெல்லின் விலையும் ஒரு மூடை 7 ஆயிரம் முதல் 8 ஆயிரம் வரை அதிகரித்தமையினால் கூடிய இலாபம் பெற்றனர். ஆனால், யூரியா இம்முறை 50 ஆயிரம் ரூபா வரை மாபியாக்களின் செயற்பாட்டினால் கறுப்புச் சந்தையில் கிடைப்பதாக விவசாயிகளின் உரையாடலில் அறிய முடிகின்றது.

எனவே, இந்த யூரியா பசளை விடயத்தில் பொறுப்புவாய்ந்த அதிகாரிகள் தலையிட்டு தீர்வொன்றைப் பெற்றுத்தர வேண்டும் என கோரிக்கை விடுக்கின்றனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

## போடியார் புலம்பல்!



இடைக்கால அரசின் பிரதமர் பதவியை மைத்ரியாரும் ஏற்க மறுக்கிறாமே. ஒருவரும் ஏற்காட்டி நம்மட யாழ் டக்லஷ், அங்கயன் மட்டக்களப்பு புள்ளயான், அமல் இவங்களிட ஒருத்தர் சும்மா சொன்னாபோதும் விழுந்தோடியடிச்சி பிரதமர் பதவியையும் எடுப்பாங்க. ஜனாதிபதி பதவியையும் எடுப்பாங்க. மஹிந்த ஊட்ட குசினி கழுவுற பதவியையும் எடுப்பாங்க.. எதயும் சோக்காக சோரம்போய் செய்யிற ஆக்கள் இவங்க மட்டும்தான்! ஏறாவூர் நஷீர் காக்காவும் ஆருர காலப்புடிச்சாவது பதவி எடுக்கிறதில கில்லாடி.

# ஆலயங்களின் வழிபாட்டு முறைமைகளை ஒழுங்குபடுத்த ஆலையடிவேம்பு பிரதேச செயலகத்தில் கலந்துரையாடல்





(அக்கரைப்பற்று நிருபர்)

ஆலயங்களின் வழிபாட்டு முறைமைகளை ஒழுங்குபடுத்தல் மற்றும் பிரதேசத்தில் இடம்பெறும் குற்றச்செயல்களை தடுத்தல் எனும் இரு பிரதான நோக்குடன் ஆலையடிவேம்பு பிரதேச செயலகத்திற்குட்பட்ட ஆலயங்கள், இந்து அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் அறநெறி ஆசிரியர்களுக்கும் பிரதேச செயலாளர் மற்றும் இராணுவத்தினருக்கும் இடையிலான விசேட சந்திப்பும் கலந்துரையாடலும் ஆலையடிவேம்பு பிரதேச செயலக கலாசார மண்டபத்தில் நேற்று நடைபெற்றது.

பிரதேச செயலாளர் வி.பபாகரன் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் அக்கரைப்பற்றில் அமைந்துள்ள 241ஆம் படைப்பிரிவின் கட்டளை அதிகாரி பிரிகேட் கொமாண்டர் ஏ.சி.அபயகோன் கலந்துகொண்டதுடன், ஆலய அறங்காவலர் சபையினர், சமயப் பெரியார்கள், அறநெறி ஆசிரியர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

பிரதேச செயலாளரின் தலைமை உரையில் ஆலயங்களின் சமூகப்பொறுப்புகள் தொடர்பில் சுட்டிக்காட்டினார். மேலும் இன்றைய இளைஞர்களை நல்வழிப்படுத்துவதன் அவசியத்தையும் ஆலயங்களில் இடம்பெறும் வழிபாட்டு முறைமைகள் மற்றும் ஒலிபெருக்கி மூலம் ஒலிபரப்பவேண்டிய பாடல்கள் மற்றும் நேரங்கள் தொடர்பிலும் சுட்டிக்காட்டினார்.

இந்நிலையில், சமூகத்தில் தற்போது நடைபெறுகின்ற கொள்ளை, சூதாட்டம், இளைஞர்களின் தேவையற்ற செயற்பாடுகளை கட்டுப்படுத்தல் போன்ற விடயங்களும் அவரால் சுட்டிக்காட்டப்பட்டன.

இதேநேரம், ஆலையடிவேம்பு பிரதேச ஆலயங்களின் செயற்பாடுகள் தொடர்பில் இங்கு ஆராயப்பட்டதுடன், சமூகப் பொறுப்புகள் தொடர்பிலும் எதிர்கால செயற்பாடுகள் தொடர்பிலும் கலந்துகொண்டவர்களால் கருத்துகள் முன்வைக்கப்பட்டன. மேலும் மரண நிகழ்வுகளில் பயன்படுத்தவேண்டிய தேவார, திருமுறைப் பாடல்கள் பற்றியும் கவனம் செலுத்தப்பட்டது.

இதன் பின்னராக உரையாற்றிய பிரிகேடியர் கொமாண்டர் மக்களுடன் இணைந்து சேவையாற்ற இராணுவம் எவ்வேளையிலும் தயாராகவுள்ளதாகவும் தங்களோடும் பிரதேச செயலகத்தோடும் பொதுமக்கள் இணைந்து பயணிக்கும்போது பிரதேசத்தில் இடம்பெறும் பல்வேறு அசம்பாவிதங்களை கட்டுப்படுத்த முடியும் எனவும் கூறினார்.

மேலும் இராணுவத்தினரின் முக்கிய தொலைபேசி இலக்கங்களை ஏற்கனவே வழங்கியுள்ளதாகவும் அவர்கள் தம்மோடு எவ்வேளையிலும் தொடர்புகொண்டு குறைபாடுகளை தெரிவிக்க முடியும் எனவும் சுட்டிக்காட்டினார்.

இதன்பின்னர் ஆலயங்கள் மற்றும் மரணச் சடங்கில் ஒலிபரப்பு செய்யவேண்டிய பாடல்கள் தொடர்பில் முறையான நடவடிக்கை எடுக்கும் பொருட்டு தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டன. இதனை நடைமுறைப்படுத்த அனைவரது விருப்பின்பேரில் ஓய்வுபெற்ற அதிபர் இந்துமாமன்றத் தலைவர் வே.சந்திரசேகரம் தலைமையில் 7 பேர் கொண்ட குழுவும் தெரிவுசெய்யப்படட்டது.

அத்தோடு தெரிவுசெய்யப்பட்ட குழுவினர் மிக விரைவாக குறிப்பிட்ட விடயங்கள் தொடர்பில் கவனம் செலுத்தி உரியவர்களுக்கு அறிய கொடுக்கவேண்டும் எனவும் முடிவெடுக்கப்பட்டது.

# மோட்டார்சைக்கிள் விபத்தில் மாணவனொருவர் உயிரிழப்பு!

(கல்லடி நிருபர்)

மட்டக்களப்பு, கரடியனாறு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கோப்பாவெளி பிரதான வீதியில் இடம்பெற்ற விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இலுப்படிச்சேனையைச் சேர்ந்த வசந்தகுமார் ஜெயசந்துரு (வயது- 17) என்ற மாணவன் நேற்று முன்தினம் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது,

சம்பவ தினத்தன்று குறித்த மாணவன் தனது மைத்துனருடன் கோப்பாவெளி பிரதேசத்திலுள்ள நெற்காணியைப் பார்வையிட்டு, இரவுவேளை வீடு திரும்பியுள்ளனர். இதன்போது அவர்கள் பயணித்த மோட்டார்சைக்கிள் வேகக் கட்டுப்பாட்டை இழந்து, அருகிலிருந்த மின்சாரத் தூணில் மோதியதனால் குறித்த மாணவன் சம்பவ இடத்திலேயே பலியானதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளிலிருந்து தெரியவந்தது.

கரடியனாறு பொலிஸ் பொறுப்பதிகாரியின் வேண்டுதலுக்கமைய சம்பவ இடத்துக்குச் சென்ற பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி எம்.எஸ்.எம்.நஸீர் சடலத்தைப் பார்வையிட்டதுடன், சடலத்தை பிரேத பரிசோதனைக்கு உட்படுத்தும் பொருட்டு, மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லுமாறு பொலிஸாருக்கு உத்தரவிட்டார்.

இச்சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கரடியனாறு பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## கரடிப்பூவல் பொது மயானம் நில அளவீடு செய்யப்பட்டது




(கிண்ணியா நிருப)

திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலகத்துக்குட்பட்ட குடாக்கரை பிரதேசத்தின் தமிழ், சிங்கள, கிறிஸ்தவ மக்கள் பயன்படுத்தும் பழமைவாய்ந்த பொது மயானத்தை நில அளவீடு செய்து தருமாறு திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச சபை உப தவிசாளர் முகம்மட் நௌபரிடம் அப்பகுதி சங்கங்கள் மற்றும் பொதுமக்கள் எழுத்துமூலமான கோரிக்கையை விடுத்துள்ளனர்.

அவர்களின் கோரிக்கையை உப தவிசாளர் முகம்மட் நௌபர் நேரில் சென்று பார்வையிட்டு பட்டினமும் சூழலும் பிரதேச சபையின் அனுசரணையுடன் பிரதேச நில அளவையியல் திணைக்களத்தின் மூலம் சங்கங்கள் மற்றும் பொதுமக்களின் பங்களிப்புடன் நேற்று முன்தினம் (26) நில அளவீடு செய்யப்பட்டது.




# ஊடகர் மோகனதாஸின் மறைவு ஊடகத்துறைக்கு பேரிழப்பாகும்

## அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர் சம்மேளனத்தின் தலைவர் கவலை



(மருதமுனை நிருபர்)

பல்துறை ஆளுமை இளம் ஊடகவியலாளர் பாக்கியராசா மோகனதாஸின் மறைவு ஊடகத்துறைக்குப் பேரிழப்பாகும் - என அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர் சம்மேளனத்தின் தலைவரும் சிரேஷ்ட ஊடகவிய லாளருமான கலாபூஷணம் பி.எம்.எம்.ஏ.காதர் தனது இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

அந்த இரங்கல் செய்தியில் மேலும் தெரிவித்திருப்பதாவது,

ஊடகவியலாளர் அமரர் பாக்கியராசா மோகனதாஸ் இளம் வயதிலேயே கலை இலக்கிய மற்றும் ஊடகத்துறையில் மிகவும் ஆர்வமாகச் செயற்பட்டவர். கட்டுரை, நேர்காணல் என நூற்றுக்கணக்கான படைப்புகளைத் தந்தவர்.

எல்லோருடனும் மிகவும் அன்பாகவும், பண்பாகவும், மரியாதையுடனும் பழகும் தன்மைகொண்டவர். இவரது படைப்புகள் மிகவும் ஆழமான அடையாளங்களைக் கொண்டவையாகும். இளம் வயதிலேயே நூற்றுக்கணக்கான படைப்புகளைத் தந்தவர். இவரது கட்டுரைகளில் ஆழமான கருத்துகள் பொதிந்திருக்கும்.

இலங்கையில் வெளிவருகின்ற அனைத்துப் பத்திரிகைகளிலும் இவரது படைப்புகள் பிரசுரமாகியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். அதிகமான படைப்புகள் ஞாயிறு தினக்குரல், தினகரன் வாரமஞ்சரி, வீரகேசரி வாரவெளியீடு, சுடர்ஒளி, தமிழன் வாரவெளியீடு பத்திரிகைளில் பிரசுரமாகியுள்ளன.

ஆசிரியரான இவர் பாடசாலையில் அதிபர், சக ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களோடும் கண்ணியமாகவும், ஒழுக்கமாகவும் நடந்து கொள்கின்ற நல்ல பண்மைக்கொண்டவர். இவரது மறைவினால் துயருற்றிருக்கின்ற இவரது குடும்பத்தினருக்கு அம்பாறை மாவட்ட ஊடகவியலாளர் சம்மேளனத்தின் சார்பாக எனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன் - என்றுள்ளது.

# ஓமானில் உயிரிழந்த இலங்கை பெண்ணின் பூதவுடல் 19 நாட்களின் பின்னர் நல்லடக்கம்

(மீராவோடை நிருபர்)

ஓமானில் மரணமடைந்த இலங்கைப் பெண்ணின் உடல் 19 நாட்களின் பின்னர் ஓமானில் நல்லடக்கம் செய்யப்பட்டுள்ளதாக மரணமடைந்த பெண்ணின் உறவினர்கள் தெரிவித்தனர்.

வாழைச்சேனை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பிறைந்துறைச்சேனை பகுதியைச் சேர்ந்த ஒரு பிள்ளையின் தாய் (வயது 42) ஒருவரே ஓமானில் மரணமடைந்துள்ளார்.

ஓமானுக்கு தொழில் நிமித்தம் கடந்த நான்கு மாதங்களுக்கு முன்னர் சென்ற இவர், கடந்த 9ஆம் திகதி அங்கு மரணமடைந்துள்ளதாக உறவினர்கள் மேலும் தெரிவித்தனர்.

திடீரென மரணமடைந்த பெண் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்ட ஓமான் பொலிஸார், வைத்திய பரிசோதனைகளின் பின்னர் உறவினர்களின் ஒப்புதலுடன் நேற்று முன்தினம் (27) பெண்ணின் உடலை ஓமானில் நல்லடக்கம் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மர்ஹூம் வை.எம்.ஹனிபாவின் பெயரை வீதிக்கு சூட்டத் தீர்மானம்



(சாய்ந்தமருது நிருபர்)

சாய்ந்தமருது பெரிய பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபையின் தலைவராகப் பணியாற்றி, ஊர் நலன்சார் விடயங்களில் அர்ப்பணிப்புடன் முன்னின்று உழைத்த மர்ஹூம் வை.எம்.ஹனிபாவின் பெயரை சாய்ந்தமருதிலுள்ள வீதியொன்றுக்கு சூட்ட கல்முனை மாநகர சபை தீர்மானித்துள்ளது.

கல்முனை மாநகர சபையின் 49ஆவது மாதாந்த பொதுச் சபை அமர்வு நேற்று முன்தினம் (26) மாலை, மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் தலைமையில் இடம்பெற்றபோது மாநகர சபையின் சாய்ந்தமருது சுயேச்சைக்குழு உறுப்பினர் எம்.எஸ்.அப்துல் றபீக் இதற்கான பிரேரணையை சமர்ப்பித்திருந்தார்.

இதன்படி, சாய்ந்தமருது-16ஆம் பிரிவில் அமைந்துள்ள வீ.எச்.வீதியில் தொடங்கி தாமரை வீதிவரை செல்லும் பாதைக்கு வை.எம்.ஹனிபா வீதி என்று பெயர் சூட்டத் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

இவ்வீதிக்கு இதுவரை எவ்வித பெயரும் இல்லாதிருப்பதாகவும் இவ்வீதியிலேயே மர்ஹூம் வை.எம்.ஹனிபா வாழ்ந்த வீடு அமைந்திருப்பதாகவும் சுட்டிக்காட்டிய மாநகர சபை உறுப்பினர் எம்.எஸ்.அப்துல் றபீக், இப்பகுதி வாழ் மக்கள் இவ்வீதிக்கு அன்னாரது பெயரை சூட்டுமாறு வேண்டுகோள் விடுத்திருக்கின்றனர் எனவும் இதனை எமது மாநகர சபை அங்கீகரிக்க வேண்டும் எனவும் வலியுறுத்தினார். இதையடுத்து இப்பெயர் சூட்டும் பிரேரணை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

அத்துடன், சாய்ந்தமருது-15 மற்றும் 17ஆம் பிரிவுகளில் அமைந்துள்ள சனசமூக நிலைய வீதி எனவும் சிலோன் வீதி எனவும் இரு பெயர்களால் அழைக்கப்பட்டு வருகின்ற பாதைக்கு ஜாமிஉல் இஸ்லாஹ் ஜும்ஆ பள்ளிவாசல் வீதி என பெயர் மாற்றம் செய்வதென தீர்மானிக்கப்பட்டது. இதற்கான பிரேரணையையும் மாநகர சபை உறுப்பினர் எம்.எஸ்.அப்துல் றபீக் கொண்டுவந்திருந்தார்.

அதேவேளை, பெரியநீலாவணை-02 அக்பர் கிராமத்தில் அமைந்துள்ள 13ஆம் குறுக்கு வீதிக்கு தக்வா பள்ளி வீதி எனவும் 14ஆம் குறுக்கு வீதிக்கு டீன் வீதி எனவும் பெயர் சூட்டுவதெனவும் இச்சபை அமர்வில் ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது. இதற்கான பிரேரணையை ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர் ஏ.ஆர்.அமீர் சமர்ப்பித்திருந்தார்.

# பதிவுசெய்யப்பட்ட கலை மன்றங்களுக்கு நாவிதன்வெளியில் காசோலை வழங்கிவைப்பு



(பெரியநீலாவணை நிருபர்)

நாவிதன்வெளி பிரதேச செயலகத்தின் கீழ் உள்ள பதிவுசெய்யப்பட்ட கலை மன்றங்களுக்கான வருடாந்த கொடுப்பனவை வழங்கும் நிகழ்வு நேற்று முன்தினம் (27) பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.எல்.எம்.ஷினாஸின் ஒருங்கிணைப்பில் நடைபெற்ற இந்த நிகழ்வில் உதவிப் பிரதேச செயலாளர் பி.பிரணவரூபன் கலை மன்றங்களுக்கான கொடுப்பனவை வழங்கினார்.

இங்கு உரையாற்றிய உதவிப் பிரதேச செயலாளர்,

கலை மன்றங்கள் பிரதேச மட்டத்தில் காணப்படுகின்ற கலைஞர்களை அடையாளம் கண்டு அவர்களை கிராம மட்டத்திலிருந்து தேசிய மட்டத்திற்கு முன்கொண்டு செல்லும் பணியை முன்னெடுக்கவேண்டும். போட்டி நிகழ்ச்சிகளில் பங்குபெறுவதற்கு தேவையான ஒத்துழைப்புகளை கலை மன்றங்கள் வழங்கவேண்டும். எதிர்காலத்தில் கலை மன்றங்களை ஒன்றிணைத்து பிரதேசத்திலுள்ள பாடசாலை மற்றும் ஏனைய நிறுவனங்களில் கலைத் துறைகளில் ஈடுபட்டு வருகின்ற கலைஞர்களை அடையாளங்கண்டு அவர்களின் திறமைகளை வெளிக்கொண்டு வருவதற்கான வேலைத்திட்டம் முன்னெடுக்கப்படவுள்ளது. இதற்கு கலை மன்றங்கள் தமது ஒத்துழைப்புகளை தொடர்ந்தும் வழங்கவேண்டும் - என்றார்.

கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் ஊடாக பிரதேசங்களில் பதிவுசெய்து இயங்கிவருகின்ற கலை மன்றங்களுக்கு இந்தக் கொடுப்பனவு வழங்கப்பட்டு வருகின்றன.

# நாடு முழுவதும் நேற்று இடம்பெற்ற ஹர்த்தாலும் ஆர்ப்பாட்டங்களும்













கொழும்பு (படப்பிடிப்பு - பிரதீப் தம்பரகே)



கொக்கல (படங்கள் - எச்.எம்.சமன்)





மொனராகலை ( படங்கள் - கெலும் குணதிலக்க)









தெல்கொடை (படங்கள் - நெவிந்து தினயன, இசுரு அசங்க)





தம்புத்தேகம (படங்கள் - சமந்த தர்மகீர்த்தி)





கலேகெதர - (படங்கள் - ரெக்ஸி வெத்தசிங்க)







நுவரெலியா (படங்கள் - சிதார இராஜ்)



மதவாச்சி (படங்கள் - ருவான் உபேபால)



போபிட்டிய



மாத்தளை



அநுராதபுரம் (படம் - ஆ.பிரதௌஸ்)



# 160 மொழிகளில் வெளியாகிறது 'அவதார் 2'



'அவதார் 2' திரைப்படம் உலகம் முழுவதும் 160 மொழிகளில் எதிர்வரும் டிசம்பர் 16ஆம் திகதி வெளியாகவுள்ளது.

ஜேம்ஸ் கெமரூன் இயக்கத்தில் கடந்த 2009ஆம் ஆண்டு வெளியாகி, உலகெங்கும் மாபெரும் வெற்றியைப் பதிவுசெய்த படம் 'அவதார்'. இரண்டு மணிநேரம் 40 நிமிடங்கள் நம்மை வேறு உலகக்கு அழைத்து சென்றிருந்தது இத்திரைப்படம்.

25 கோடி அமெரிக்க டொலர்கள் பொருட் செலவில் உருவாக்கப்பட்ட இத்திரைப்படம் உலகம் முழுவதும் 280 கோடி அமெரிக்க டொலர்கள் வசூலை அள்ளியது. அதுவரை வேறு எந்தத் திரைப்படமும் நிகழ்த்த முடியாத வசூல் சாதனையை இத்திரைப்படம் நிகழ்த்தியது.

இந்நிலையில், இந்தப் படத்தின் இரண்டாம் பாகம் 2022ஆம் ஆண்டு டிசம்பர் 16ஆம் திகதி வெளியாகவுள்ளது. கிட்டத்தட்ட 12 ஆண்டுகள் கழித்து இந்தத் திரைப்படத்தின் 2ஆம் பாகம் வெளியாகவுள்ளது குறிப்பிடத் தக்கது. முதல் பாகத்தைப்போல் மிகச் சிறப் பான காட்சி அனுபவத்துடன் தயாரிக்கப்பட்ட இத்திரைப்படம் உலகம் முழுவதும் 160 மொழிகளில் வெளியாகவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. இப்படத்தின் ரிரைலரும் மிக விரைவில் வெளியாகவுள்ளது.

மேலும், இப்படம் உலக சினிமா வரலாற் றில் சிறந்த உருவாக்கத்திற்கான சாதனை யைப் படைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

# ரஷ்யாவை அச்சுறுத்தினால் அணு ஆயுதத் தாக்குதல்தான்

## மேற்குலகுக்கு ரஷ்யா எச்சரிக்கை



''உக்ரைன் விவகாரத்தில் தலையிடும் நாடுகளால் தாங்கள் அச்சுறுத்தப்பட்டால் அணு ஆயுதத்தைப் பயன்படுத்தவும் தயங்க மாட்டோம்'' என ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து புட்டின் மேலும் தெரிவித்துள்ளதாவது,

ரஷ்யாவை அச்சுறுத்தும் எவருக்கும் தங்களின் பதிலடி மின்னல் வேகத்தில் இருக்கும். எந்தவொரு நாட்டையும் தாக்குவதற்குத் தேவையான ஆயுதங்கள் எங்களிடம் இருக்கின்றன. அதனால் நாங்கள் பெருமை கொள்ளவில்லை - என்றார்.

மேலும், உக்ரைனை நண்பனாக பாவித்து வந்ததாகவும் மேற்கத்தேய நாடுகள் அதனை ரஷ்யாவுக்கு எதிரான நாடாக மாற்றி விட்டதாகவும் புட்டின் தெரிவித்துள்ளார்.

**உக்ரைன் மீதான போரை ரஷ்யா கைவிட வேண்டும்**

இதேவேளை, உக்ரைன் மீதான போரை ரஷ்யா கைவிட வேண்டுமென போப் பிரான்சிஸ் தொடர்ந்து தெரிவித்துவரும் நிலையில், ரஷ்யா - உக்ரைன் இடையேயான போர் முடிவுக்கு வந்து அமைதி நிலவுவதற்காக சிறப்புப் பிரார்த்தனையும் நடத்தியுள்ளார்.

செயிண்ட் பீட்டர்ஸ் தேவாலயத்தில் நடைபெற்ற பிரார்த்தனை யில், பிஷப்கள், பாதிரியார்கள் மற்றும் பொதுமக்கள் என நூற்றுக்கணக்கானோர் கலந்துகொண்டனர். தொடர்ந்து பேசிய போப் பிரான்சிஸ், உக்ரைன் மீதான போரை ரஷ்யா கைவிட வேண்டுமென கேட்டுக்கொண்டுள்ளார்.

**ஆயுதக் கிடங்கு தகர்ப்பு**

உக்ரைனுக்கு அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளால் வழங்கப்பட்ட ஆயுதங்கள் வைக்கப்பட்டிருந்த கிடங்கு அழிக்கப்பட்டதாக ரஷ்யா தெரிவித்துள்ளது.

அமெரிக்கா மற்றும் நேச நாடுகள், உக்ரைனுக்கு உதவுவதற்காக ஏராளமான ட்ரோன் விமானங்கள், விமான எதிர்ப்பு மற்றும் பீரங்கி எதிர்ப்பு ஏவுகணைகளை வழங்கிவந்தன. சப்போர்ஷியா நகரில், விமானங்கள் நிறுத்தப் பயன்படுத்தப்பட்ட பெரிய கட்டடத்தில் அவை வைக்கப்பட்டிருந்தன.

செவ்வாய்க்கிழமை இரவு, உக்ரைனின் 59 இராணுவ நிலைகள் மீது ரஷ்யப் படைகள் கலிபிர் (Kalibr) ரக ஏவுகணைகளை வீசி நிகழ்த்திய தாக்குதலில் சப்போர்ஷியா நகரிலிருந்த அந்த ஆயுதக் கிடங்கும் அழிக்கப்பட்டதாக ரஷ்ய இராணுவ அமைச்சு தெரிவித்துள்ளது.

**உக்ரைன் - ரஷ்யா நட்பைக் குறிக்கும் நினைவுச்சின்னம் அகற்றம்**

ரஷ்யாவிற்கும் உக்ரைனுக்கும் இடையிலான நட்பைக் குறிக்கும் வகையில், உக்ரைன் தலைநகர் கீவ்வில் அமைக்கப்பட்டிருந்த சோவியத் கால நினைவுச்சின்னம் அகற்றப்பட்டது.

சோவியத் யூனியனின் 60ஆவது ஆண்டு விழாவை நினைவுகூரும் வகையில் கடந்த 1982ஆம் ஆண்டு Peoples Friendship Arch என்றழைக்கப்படும் வானவில் வடிவிலான நினைவுச்சின்னம் அமைக்கப்பட்டது.

அதற்கு அருகிலேயே சுமார் 27 அடி உயரத்தில் உக்ரைன் மற்றும் ரஷ்யத் தொழிலாளி ஒரு பீடத்தில் ஒன்றாக இணைந்து நிற்பது போன்ற சிலையும் நிறுவப்பட்டது.

உக்ரைன் மீதான ரஷ்யப் படையெடுப்பிற்கு கண்டனம் தெரிவிக்கும் வகையில் இந்த நினைவுச்சின்னம் அகற்றப்படுவதாக கீவ் மேயர் தெரிவித்துள்ளார்.

**இந்தியாவின் நடுநிலையால் போர் நிற்கப்போவதில்லை**

இந்தியாவின் நடுநிலைத்தன்மையால் போர் நிற்கப்போவதில்லை என்று உக்ரைன் வெளியுறவு அமைச்சர் டிமிட்ரோ குலேபா தெரிவித்துள்ளார்.

உக்ரைன் மீது ரஷ்யா தொடுத்த போர் இரண்டு மாதங்களைக் கடந்தும் நீடித்து வருகிறது. இதில் அமெரிக்கா, பிரிட்டன் உட்பட பல நாடுகள் ரஷ்யாவுக்கு எதிரான நிலைப்பாடு எடுத்துள்ளன

இந்தியா உள்ளிட்ட சில நாடுகள் நடுநிலை வகித்து வருகின்றன. அமைதியின் பக்கம் நிற்பதாக அறிவித்துள்ள இந்தியா போரை நிறுத்தும்படி இருதரப்பினருக்கும் கோரிக்கை விடுத்துள்ளது.

இதுகுறித்து செய்தியாளர்களிடம் பேசிய உக்ரைன் அமைச்சர் போரை நிறுத்தவேண்டும் என்ற இந்தியாவின் நல்லெண்ணத்தை வரவேற்கிறோம். ஆனால், சூழ்நிலைகளைப் பார்த்தால் இது போன்ற நடுநிலைமையால் போர் நிற்கப்போவதில்லை என்று தெரிவித்துள்ளார்.

உலக செய்திகள்

# அதிகரிக்கும் சீன ஆதிக்கம்: இந்தியாவுக்கு உதவத் தயாரென அமெரிக்கா அறிவிப்பு



சீனாவின் கடற்படை நடவடிக்கைகளை எதிர்கொள்ளும் வகையில் இந்தியாவிற்கு உதவ இருப்பதாக அமெரிக்க அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்தியப் பெருங்கடல் பகுதியில் தடையற்ற வெளிப்படையான வர்த்தகத்திற்கும் அமெரிக்கா ஒத்துழைப்பு வழங்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

இந்தியா தனது இராணுவத்தை நவீனமயமாக்கவும், இந்திய இராணுவத்தினர் ரஷ்யாவின் பூர்வீகமான ஆயுதக் கொள்முதலை சார்ந்திருக்காமல் விலகிச் செல்லவும் அமெரிக்கா உதவும் என்றும் அந்த அதிகாரி மேலும் குறிப்பிட்டார்.

இந்தியாவின் உள்நாட்டு ஆயுத உற்பத்தித் திட்டங்கள் அமெரிக்காவுக்குப் பொருத்தமானவையே என்றும் அமெரிக்க அதிகாரி தெரிவித்தார்.




பசியால் அழும் தங்கைக்கு புட்டிப்பாலூட்டி சமாதானப்படுத்தும் பாசக்கார அண்ணன்.....





புனித ரமழான் மாதம் தொடரும் நிலையில், லைலத் அல்-கத்ரைக் குறிக்கும் வகையில் ஜெருசலேமிலுள்ள அல்-அக்ஸா பள்ளிவாசலில் சுமார் 2,50,000 பேர் கூடி தொழுகையில் ஈடுபட்டிருந்தபோது.....

(முஹம்மது நபியவர்கள் குர்ஆனின் முதல் வெளிப்பாட்டைப் பெற்ற இரவாக லைலத் அல் கத்ர் நினைவுகூரப்படுகிறது)

# பொன்னியின் செல்வன் ஓடிடி உரிமையைக் கைப்பற்றிய அமேசன்




இயக்குநர் மணிரத்தினத்தின் 'பொன்னியின் செல்வன்' படத்தின் ஓடிடி உரிமையை அமேசான் ப்ரைன் நிறுவனம் கைப்பற்றியுள்ளது.

கல்கியின் வரலாற்று புதினமான பொன்னியின் செல்வன் படத்தை இரண்டு பாகங்களாக மணிரத்னம் இயக்கி வருகிறார். லைக்கா புரொடக்சன்ஸ் நிறுவனத்துடன் இணைந்து மணிரத்னம் தனது மெட்ராஸ் டாக்கீஸ் சார்பாக தயாரித்துள்ளார். இந்தப் படத்துக்கு ஏ.ஆர்.ரஹ்மான் இசையமைக்க, ரவிவர்மன் ஒளிப்பதிவு செய்துள்ளார்.

இந்தப் படத்தில் ஜெயம் ரவி ராஜராஜசோழனாகவும், கார்த்தி வந்தியத்தேவனாகவும், விக்ரம் ஆதித்த கரிகாலனாகவும், ஐஸ்வர்யா ராய் நந்தினியாகவும், த்ரிஷா குந்தவி தேவியாகவும் நடித்துள்ளனர். மேலும் நடிகர்களின் தோற்ற புகைப்படங்கள் சமீபத்தில் வெளியாகி நல்ல வரவேற்பைப் பெற்று வருகிறது.

இந்தப் படத்தின் முதல் பாகம் எதிர்வரும் செப்டம்பர் 30ஆம் திகதி திரைக்கு வரவிருக்கிறது. இந்நிலையில், பொன்னியின் செல்வன் படத்தை ஓடிடியில் வெளியிடும் உரிமையை அமேசான் பிரைம் நிறுவனம் கைப்பற்றியுள்ளது. முதல் பாகம் மற்றும் இரண்டாம் பாகத்தை சேர்த்து ரூ. 125 கோடிக்கு வாங்கப்பட்டுள்ளது.

# பிரான்ஸ் ஜனாதிபதி மெக்ரோன் மீது தக்காளி வீச்சு





இரண்டாவது முறையாக பிரான்ஸ் ஜனாதிபதித் தேர்தலில் வெற்றிபெற்ற இம்மானுவெல் மெக்ரொன் (வயது 44) மீது மர்ம நபர் தக்காளி வீசிய சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

பிரான்ஸில் கடந்த சில வாரங்களுக்கு முன் தேர்தல் நடந்தது. இதில், எல்.ஆர்.இ.எம். எனப்படும் லா ரிபப்ளிக் என் மார்செல் கட்சியின் வேட்பாளரும், தற்போதைய ஜனாதிபதியுமான மெக்ரொன், பிரதான எதிர்க்கட்சியான ஆர்.என். எனப்படும் நேஷனல் ரேலி கட்சியின் மரின் லீ பென் (வயது 53) உட்பட 12 வேட்பாளர்கள் போட்டியிட்டனர். இதில் இம்மானுவேல் மெக்ரொன் 58 சதவீதத்துக்கு மேல் வாக்குகளைப் பெற்று மீண்டும் ஜனாதிபதியாக தெரிவானார்.

தேர்தல் வெற்றியை கொண்டாட வேண்டி நேற்றுமுன்தினம் ஜனாதிபதி மெக்ரொன், பெரிசின் வடமேற்கில், செர்ஜி பகுதியில் பொதுமக்களை சந்தித்து நன்றி தெரிவித்தார். அப்போது அவர் மீது குறிவைத்து எங்கிருந்தோ தக்காளி வீசப்பட்டது. உடனே சுதாரித்துக்கொண்ட பாதுகாவலர்கள் தயாராக வைத்திருந்த குடையை விரித்து மெக்ரொனை அங்கிருந்த பத்திரமாக அழைத்துச்சென்றனர். இதன் வீடியோ காட்சி சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகிறது.

கடந்த ஒக்டோபரில் லியோன் நகர் சென்றிருந்தபோது மெக்ரோன் மீது முட்டை வீசப்பட்டது. அதேபோல், சில மாதங்களுக்கு முன்பு, மென்ரொனின் கன்னத்தில் ஒருவர் அறைந்தார். இப்போது தக்காளி வீச்சு தாக்குதலுக்குள்ளாகினார்.

## தெற்கு ஆர்ஜென்டினாவில்....

# 70 மில். ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த டைனோசரின் புதை படிமங்கள்




தெற்கு ஆர்ஜென்டீனாவில் கண்டெடுக்கப்பட்ட 70 மில்லியன் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்த கத்தி போன்ற கூர் நகங்கள் உடைய டைனோசரின் புதை படிமங்கள் பியூனஸ் அயர்ஸிலுள்ள பெர்னார்டினோ ரிவாடாவியா இயற்கை அறிவியல் அருங்காட்சியகத்தில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

சாண்டா க்ரூஸ் மாகாணத்தில் 2020ஆம் ஆண்டில் கண்டெடுக்கப்பட்ட இந்த டைனோசரின் தசைகள் மற்றும் தசைநார்கள் நன்கு பாதுகாக்கப்பட்ட நிலையில் இருந்ததால் அந்த டைனோசர் குறித்து நன்கு அறிந்துகொள்ள முடிந்ததாக ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

மைக்ரோதோரக்ஸ் வகையைச் சேர்ந்த இந்த டைனோசர்கள் 10 மீற்றர் உயரம்வரையில் வளரக்கூடியது என்றும் 5 தொன் எடைவரை கொண்டிருக்கும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# போதைப்பொருள் கடத்தல் மலேஷிய தமிழருக்கு தூக்கு



சிங்கப்பூர், இந்திய வம்சாவளியைச் சேர்ந்த மலேஷியர் நாகேந்திரன் தர்மலிங்கம் 42.72 கிராம் ஹெராயின் போதைப்பொருளுடன் சிங்கப்பூரில் 2009ஆம் ஆண்டு கைதுசெய்யப் பட்டார். அவர் மீதான குற்றச்சாட்டு நிரூபிக்கப்பட்டதால், 2010ஆம் ஆண்டு குற்றவாளியாக அறிவிக்கப்பட்டார்.

மலேஷியாவில் 15 கிராமுக்கு கூடுதலாக போதைப்பொருள் எடுத்துச் சென்றால், அந்நாட்டு சட்டத்தின் கீழ் மரணதண்டனை விதிக்கப்படுகிறது. அதன்படி, தனக்கு விதிக்கப்பட்ட தூக்குத் தண்டனைக்கு எதிராக நாகேந்திரன் கடந்த 2011ஆம் ஆண்டுமுதல் மேன்முறையீடு செய்தபோதிலும், அனைத்து மனுக்களும் தள்ளுபடி செய்யப்பட்டன. தூக்குத்தண்டனையை இரத்துசெய்ய கோரி அந்நாட்டு ஜனாதிபதிக்கு அவர் அனுப்பிய கருணை மனுவும் நிராகரிக்கப்பட்டது.

சிங்கப்பூர் நீதிமன்றத்தில் தர்மலிங்கத்தின் தாய் தாக்கல்செய்த இறுதி மேன்முறையீட்டு மனுவும் செவ்வாய்க்கிழமை தள்ளுபடி செய்யப்பட்டது. இதையடுத்து, நாகேந்திரன் தர்மலிங்கம் நேற்றுமுன்தினம் காலை சிங்கப்பூரிலுள்ள சாங்கி சிறையில் தூக்கிலிடப்பட்டார். அவரது உடல் குடும்பத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டது.

இது குறித்து நாகேந்திரனின் சகோதரர் நவீன் குமார் கூறுகையில், மலேஷியாவில் இபோ நகரில் நகேந்திரன் இறுதிச் சடங்குகள் நடைபெறும் என்று தெரிவித்தார்.

தர்மலிங்கம் என்ன செய்கிறோம் என்பது தெரிந்தே போதைப் பொருள் கடத்தினார் என்று சிங்கப்பூர் அரசு விளக்கமளித்துள்ளது.

# கோஹ்லி ஐ.பி.எல்லில் இருந்து ஓய்வு எடுக்கவேண்டும் - ரவி சாஸ்திரி



**கி**ரிக்கெட் உலகின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர்களில் ஒருவரான விராட் கோஹ்லி கடந்த 2 ஆண்டுகளாக ஃபார்மில் இல்லாமல் திணறிவரும் நிலையில், நடப்பு ஐ.பி.எல். தொடரிலும் ஓட்டங்களை குவிக்க முடியாமல் திணறிவருகிறார். 8 போட்டிகளில் வெறும் 119 ஓட்டங்களை மட்டுமே அடித்த விராட் கோஹ்லி, ராஜஸ்தான் அணிக்கு எதிரான போட்டியில் ஓபனிங்கில் இறக்கிவிடப்பட்டார். ஆனால், அதிலும் 9 ஓட்டங்களில் ஆட்டமிழக்க 9 போட்டிகளில் 128 ஓட்டங்கள் மட்டுமே அடித்துள்ளார்.

விராட் கோஹ்லி தொடர்ந்து திணறிவரும் நிலையில், அவருக்கு சிறிய ஓய்வு தேவை என்றும் அதனால் ஐ.பி.எல்லில் இருந்து ஓய்வு எடுத்துக்கொள்ள வேண்டும் என்றும் பல முன்னாள் வீரர்கள் வலியுறுத்திவருகின்றனர். அந்த வரிசையில் இந்திய அணியின் முன்னாள் பயிற்றுவிப்பாளரான ரவி சாஸ்திரியும் இணைந்துள்ளார்.

விராட் கோஹ்லி குறித்து பேசிய ரவி சாஸ்திரி, அனைத்து விதமான ஃபார்மட்டுகளிலும் தொடர்ச்சியாக ஆடிவரும் விராட் கோஹ்லிக்கு கண்டிப்பாக ஓர் ஓய்வு தேவை. சில நேரங்களில் பேலன்ஸ் தேவை. சர்வதேச கிரிக்கெட்டில் இன்னும் 6-7 ஆண்டுகள் ஆடவேண்டும் என்றால் ஐ.பி.எல்லில் ஓய்வு எடுக்கவேண்டும். 14-15 ஆண்டுகள் தொடர்ச்சியாக கிரிக்கெட் ஆடிவரும் கோஹ்லிக்கு ஓய்வு தேவை. விராட் மட்டுமல்ல, தொடர்ச்சியாக கிரிக்கெட் ஆடிவரும் எந்த வீரராக இருந்தாலும் ஓய்வு தேவை. இந்தியாவிற்காக இன்னும் பல ஆண்டுகள் நன்றாக ஆடவேண்டுமென நினைத்தால் தேவையான நேரத்தில் ஓய்வு எடுக்கவேண்டும் என்று ரவி சாஸ்திரி தெரிவித்துள்ளார்.

# டெல்லி அணியின் செயற்பாடு தொடர்பில் அதிருப்தி வெளியிட்ட மஹேல



நடப்பு ஐ.பி.எல். லீக் தொடரில் அண்மையில் நடைபெற்ற டெல்லி கெப்பிட்டல்ஸ் - ராஜஸ்தான் ரோயல்ஸ் அணிகள் மோதிய போட்டியில் இறுதி ஓவரின் 3ஆவது பந்தில் நோ போல் சர்ச்சை எழுந்தது. ஆனால், நடுவர்கள் அதனை நோ போல் கொடுக்க மறுத்தனர். இதனால் மைதானத்திற்கு வெளியே அமர்ந்திருந்த டெல்லி அணியினர் மிகவும் சீற்றத்துடன் கானப்பட்டனர். ஷர்துல் தாக்கூர் உள்ளிட்ட சிலர், மூன்றாம் நடுவர் இதில் தலையிட வேண்டும் என்றும் சைகையின் மூலம் தெரிவித்தனர். ஆனால், நடுவர்கள் இதனை கண்டுகொள்ளவில்லை.

இடையே ஷேன் வொட்சன், ரிஷப் பண்டிடம் ஏதோ கூற, கோபத்தின் உச்சிக்கு சென்ற ரிஷப், பேட்ஸ்மேன்களை வெளியே வருமாறு சைகை காட்டினார். இதனால் போட்டி சிறிதுநேரம் பரபரப்புடன் காணப்பட்டது. மேலும், உதவிப் பயிற்சியாள ரான பிரவின் ஆம்ரே, ஒரு படி மேலே சென்று மைதானத்திற்குள்ளேயே நுழைந்து நடுவரிடம் வாக்குவாதத்தில் ஈடுபட்டார். இதையடுத்து நடுவர்கள் அவரை சமாதானப் படுத்தி மைதானத்திற்கு வெளியே அனுப்பினர்.

இந்நிலையில், தற்போது இந்தச் சம்பவம் தொடர்பாக இலங்கை அணியின் முன்னாள் வீரரும் மும்பை இந்தியன்ஸ் அணியின் பயிற்சியாளருமான மஹேல ஜெயவர்தன கருத்து தெரிவித்துள்ளார்.

கண்டிப்பாக இதுமாதிரியான நோ போல் விடயங்களில் கவனம் செலுத்த வேண்டும். 3ஆவது நடுவர் பார்த்து கள நடுவர்களுக்கு அறிவுறுத்தும்படி செய்ய வேண்டும். அதேவேளை, இந்த விடயத்தில் டெல்லி அணி செயற்பட்ட விதம் அதிருப்தி யளிக்கிறது.

போட்டியை நிறுத்துவதோஇ களத்திற்குள் அத்துமீறி நுழைவதோ சரியில்லை. 3ஆவது நடுவரிடம் செல்வதற்கு விதிமுறைகள் அனுமதிக்கவில்லை எனும்போது அதை செய்ய வலியுறுத்துவதில் அர்த்தம் இல்லை. போட்டியின் இடையே இரண்டரை நிமிடம் ஓய்வில் பயிற்சியாளர்கள் களத்திற்குள் செல்ல அனுமதிக்கப்படுகிறார்கள். அப்போது மட்டும்தான் உள்ளே செல்ல வேண்டுமே தவிர, எல்லா நேரத்திலும் பயிற்சியாளர்கள் செல்லக்கூடாது என ஜெயவர்தன

# ரமழான் மாத நோன்பு நோற்ற கிரிக்கெட் வீரர் சனத்



இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் அதிரடி ஆரம்ப துடுப்பாட்ட வீரரான சனத் ஜெயசூரிய அண்மைக்காலங்களாக ஒவ்வொரு வருடமும் இஸ்லாமியர்களின் புனித ரமழான் மாதத்தில் நோன்பு நோற்று வருகின்றார்.


அந்த வகையில் இந்த வருடமும் ரமழான் மாதத்தில் அவர் நேற்று முன்தினம் நோன்பு நோற்றார். ஒவ்வொரு ஆண்டும் தனது இஸ்லாமிய நண்பர்களுடன் சேர்ந்து ரமழானுக்காக சில நாட்கள் நோன்பு நோற்பதாக ஜெயசூரிய கடந்த ஆண்டு வழங்கிய பேட்டி ஒன்றின்போது குறிப்பிட்டிருந்தார்.

மூத்த பேராசிரியர் அர்ஜுன டி சில்வாவும் இந்த வருடம் சனத் ஜெயசூரியவுடன் இணைந்து சுமார் 14 மணித்தியாலம் நோன்பு நோற்றதாகக் கூறப்படுகிறது.

# விலகிய நம்பர் வன் வீராங்கனை இகா

டென்னிஸ் தரவரிசையில் மகளிர் ஒற்றையர் பிரிவில் நம்பர்-1 வீராங்கனையாகத் திகழும் போலந்தைச் சேர்ந்த 20 வயதாகும் இகா ஸ்வியாடெக் இறுதியாக விளையாடிய 23 போட்டிகளிலும் வெற்றிபெற்று அசத்தியுள்ளார். கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற ஸ்டட்கார்ட் ஓபன் இறுதிப் போட்டியில் பெலாரஷ்ய வீராங்கனை அரினா சபலெங்காவை தோற்கடித்து தொடர்ந்து நான்காவது பட்டத்தை வென்றார்.

இந்நிலையில், மாட்ரிட் ஓபன் டென்னிஸ் தொடரிலிருந்து இகா ஸ்வியாடெக் விலகியுள்ளார். வலது தோள்பட்டையில் ஏற்பட்ட காயம் காரணமாக இவர் தொடரிலிருந்து விலகியுள்ளார். மாட்ரிட் ஓபன் டென்னிஸ் தொடரின் தகுதி சுற்றுப்போட்டிகள் தற்போது நடந்துவரும் நிலையில் அவர் இதை தெரிவித்துள்ளார்.



விளையாட்டு செய்திகள்

thamilansports@gmail.com

# இலங்கை அணியில் வாய்ப்பில்லை நாட்டை விட்டு வெளியேற முடிவுசெய்துள்ள ரொஷேன் சில்வா



இலங்கை டெஸ்ட் அணியின் மத்தியவரிசை துடுப்பாட்ட வீரர் ரொஷேன் சில்வா இங்கிலாந்தில் நடைபெறவுள்ள கௌண்டி கிரிக்கெட் தொடரில் விளையாட தீர்மானித்துள்ளார். இதனால் அவருடைய சர்வதேச கிரிக்கெட் எதிர்காலம் கேள்விக்குறியாகும் நிலை ஏற்பட்டுள்ளது.

ரொஷேன் சில்வா இலங்கை அணிக்காக 12 டெஸ்ட் போட்டிகளில் விளையாடியுள்ளதுடன், இறுதியாக 2019ஆம் ஆண்டு பிரிஸ்பேனில் நடைபெற்ற அவுஸ்திரேலிய அணிக்கு எதிரான டெஸ்ட் போட்டியில் விளையாடியிருந்தார். எனினும், கடந்த மூன்று வருடங்களாக குழாத்தின் மேலதிக வீரராக இணைக்கப்பட்டபோதும் அவருக்கு விளையாடுவதற்கான வாய்ப்புகள் கிடைக்கவில்லை.

இலங்கையின் உள்ளூர் கிரிக்கெட்டில் சிறந்து விளங்கிவரும் ரொஷேன் சில்வாவுக்கு இலங்கை தேசிய அணியில் தொடர்ந்தும் விளையாட வாய்ப்பு நிராகரிக்கப்பட்டு வந்தது. இவ்வாறானதொரு நிலையில் தற்போது இலங்கையில் நிலவும் பொருளாதார சிக்கலினை கவனத்திற்கொண்டுஇ ரொஷேன் சில்வா இங்கிலாந்தில் உள்ளூர் போட்டிகளில் விளையாட தீர்மானித்துள்ளார் என்ற தகவல்கள் வெளியாகியுள்ளன.

பங்களாதேஷ் டெஸ்ட் தொடரில் இறுதி பதினொருவரில் விளையாடுவதற்கான வாய்ப்பில்லை என்ற அச்சத்தை உணர்ந்துள்ள ரொஷேன் சில்வா, பங்களாதேஷில் சென்று மேலதிக வீரராக இருப்பதை விடவும் வாய்ப்பு கிடைத்துள்ள லென்கஷையர் கழகத்தில் விளையாட முடியுமென எதிர்பார்த்துள்ளார். இரண்டு பிள்ளைகளின் தந்தையான ரொஷேன் சில்வா, தனது குடும்பத்துக்காகவும் குடும்பத்தின் தேவைக்காகவும் இங்கிலாந்து மற்றும் அவுஸ்திரேலியாவில் லீக் கிரிக்கெட் விளையாட முடிவுசெய்வார் என எதிர்பார்க்கப்படுகின்றது.

# டெஸ்ட் அணியின் தலைவராகும் ஸ்டோக்ஸ்?



இங்கிலாந்து டெஸ்ட் அணியின் தலைவராக செயற்பட்ட ஜோ ரூட் டெஸ்ட் தலைமையிலிருந்து விலகிய நிலையில், சகலதுறை வீரர் பென் ஸ்டோக்ஸ் புதிய டெஸ்ட் அணித்தலைவராக நியமிக்கப்படவுள்ளதாக இங்கிலாந்து ஊடகங்கள் தகவல் வெளியிட்டுள்ளன.

ஜோ ரூட் தலைமையில் ஆஷஸ் டெஸ்ட் தொடரை 0-4 என்ற கணக்கில் பறிகொடுத்த இங்கிலாந்து அணி, மேற்கிந்திய தீவுகள் அணிக்கு எதிரான டெஸ்ட் தொடரையும் 0-1 என்ற கணக்கில் இழந்தது. இதனால் ஜோ ரூட் தனது பதவியை இராஜினாமா செய்திருந்தார். இந்நிலையிலேயே பென் ஸ்டோக்ஸ் புதிய டெஸ்ட் தலைவராக பதவி ஏற்கவுள்ளார் என தகவல் வெளியாகியுள்ளது. அவர் விரைவில் தலைமைப் பதவியை தொடங்குவார் எனவும் கூறப்படுகிறது.

இதேவேளை, தென்னாப்பிரிக்காவின் முன்னாள் ஜாம்பவான் கேரி கிர்ஸ்டன் இங்கிலாந்து அணியின் தலைமைப் பயிற்சியாளராக நியமிக்கப்படவுள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

# முதலிடத்தில் மும்பை, சென்னை அணிகள்

2008ஆம் ஆண்டுமுதல் நடைபெற்றுவரும் இந்தியன் ப்ரீமியர் லீக் தொடரின் 15ஆவது தொடர் கடந்த மார்ச் மாதம் 26ஆம் திகதிமுதல் நடைபெற்று வருகிறது. கிட்டத்தட்ட அரைவாசி லீக் போட்டிகள் நிறைவடைந்துள்ள நிலையில், 5 தடவைகள் சம்பியனான மும்பை இந்தியன்ஸ் வரிசையாக 8 தோல்விகளை சந்தித்து முதல் அணியாக ப்ளேஓப் வாய்ப்பை இழந்துள்ள நிலையில், 4 தடவைகள் சம்பியனான சென்னை சுப்பர் கிங்ஸ் அணியும் ப்ளேஓப் வாய்ப்பை இழக்கவுள்ளது.

இந்நிலையில், ஐ.பி.எல். அணிகளின் விலைமதிப்பு பட்டியலை போர்ப்ஸ் நிறுவனம் வெளியிட்டுள்ளது. அதன் விவரம் வருமாறு,

மும்பை இந்தியன்ஸ் 9,962 கோடி ரூபாயுடன் முதலிடத்திலும் சென்னை அணி 8,811 கோடி ரூபாயுடன் 2ஆவது இடத்திலும் உள்ளன. கொல்கத்தா 8,428 கோடி ரூபாயுடன் 3ஆவது இடத்திலும், லக்னோ 8,236 கோடி ரூபாயுடன் 4ஆவது இடத்திலும் உள்ளன. டெல்லி 7,930 கோடி ரூபாயுடன் 5ஆவது இடத்திலும், பெங்களூர் 7,853 கோடி ரூபாயுடன் 6ஆவது இடத்திலும் உள்ளன.

ராஜஸ்தான் 7,662 கோடி ரூபாயுடன் 7ஆவது இடத்திலும், ஐதராபாத் 7,432 கோடி ரூபாயுடன் 8ஆவது இடத்திலும் உள்ளன. பஞ்சாப் 7,087 கோடி ரூபாயுடன் 9ஆவது இடத்திலும், குஜராத் 6,512 கோடி ரூபாயுடன் 10ஆவது இடத்திலும் உள்ளன. (தொகைகள் அனைத்தும் இந்திய மதிப்பில் உள்ளன.)






Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7

இலங்கை தினசரி மற்றும் வாரந்த பத்திரிகைகளை உங்கள் மொபைலில் பெற்றுக்கொள்ள எம்மோடு இணையுங்கள்

Viber இல் இணைய இங்கே CLICK செய்யுங்கள்

Viber




இக் குழுமத்தில் இணைவதனால் மற்றவர்கள் உங்கள் தொலைபேசி இலக்கத்தை பார்வையிட முடியாது

CLICK

